# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 30 வியாழக்கிழமை (12-04-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:137


### இன்று நள்ளிரவு முதல் அரசு யுத்தநிறுத்தம்

## தாக்குதல்களை நிறுத்துமாறு படைத் தளபதிகளுக்கு உத்தரவு!

கொழும்பு,ஏப்.12

விடுதலைப் புலிகளுக்கு எதிரான சகல தாக்குதல் நடவடிக்கைகளையும் இன்று நள்ளிரவு 12 மணி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி அதிகாலை 6 மணி வரை நிறுத்திக் கொள்ளுமாறு தேசிய பாதுகாப்பு அமைச்சு படைத் தளபதிகளைப் பணித்துள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் இடம்பெறும் பகுதிகளில் தாக்குதல்களை மேற்குறிப்பிட்ட காலப் பகுதியில் தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறும் படைத்தளபதிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

தமிழ் - சிங்கள புத்தாண்டையொட்டி அரசு கடைப்பிடிக்கவுள்ள யுத்தநிறுத்தம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு நேற்று வெளியிடப்பட்டது. அதன்படி இன்று நள்ளிரவு 12 மணி முதல யுத்தநிறுத்தம் அமுலுக்கு வருகின்றது. 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6 மணி வரை யுத்தநிறுத்தம் அமுலில் இருக்கும்.

பல தரப்புகளிலும் இருந்து விடுக்கப்பட்ட கோரிக்கைகளை அடுத்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிரேஷ்ட அமைச்சர்களுடன் கலந்துரையாடிய பிறகு யுத்தநிறுத்தம் தொடர்பாக முடிவு எடுக்கப்பட்டதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

சகல தாக்குதல்களையும் நிறுத்திக் கொள்ளுமாறு படைத்தளபதிகளுக்கு அறிவுறுத்தல் வழங்குமாறு ஜனாதிபதி நேற்றுப் பாதுகாப்பு அமைச்சுக்கு உத்தரவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஜ-3-10)

### கட்டுநாயக்காவில் நேற்றுக் காலை

## ஜேர்மனிக்குப் புறப்பட்ட விமானத்தில் திடீர்த் தீ!

### தமிழ்ப் பெண் உட்பட நால்வர் காயம்

கொழும்பு,ஏப்.12

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இருந்து நேற்றுக் காலை 145 பயணிகளுடன் ஜேர்மனிக்குப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயர் லைன்ஸ் விமானம் ஒன்றில் திடீரெனத் தீப்பிடித்தது.

விமானம் புறப்படுவதற்காக ஓடுதளத்தில் இருந்து கிளம்பிய சில நிமிட நேரத்தில் அதில் தீப்பற்றி விமானத்தின் உள்ளே புகை மண்டலம் எழுந்ததாகக் கூறப்படுகின்றது. விமானி உடனடியாக விமானத்தை தரையிறக்கினார். விமானத்தின் அவசரகாலக் கதவுகள் ஊடாகப் பயணிகள் அனைவரும் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர். அச்சமயம் ஏற்பட்ட களேபரத்தில் தமிழ்ப் பெண் பயணி ஒருவர் உட்பட நான்கு பயணிகளுக்கு காயம் ஏற்பட்டது.

காயமடைந்த தமிழ்ப் பெண் கர்ப்பிணி என்றும் அவர் உடனடியாக நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அறியப்படுகிறது.

நெதர்லாந்துப் பிரஜை ஒருவருக்கு கால் முறிந்த நிலையில் நவ

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் இயக்க சந்தேகநபர்கள்

# பத்துப் பேரை அரசு விடுவித்தது!

## புத்தாண்டை முன்னிட்டு நல்லெண்ண நடவடிக்கை

கொழும்பு,ஏப்ரல்12

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க சந்தேக நபர்கள் என்ற பெயரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த பத்துப் பேரை விடுதலை செய்வதாக அரசு நேற்று அறிவித்திருக்கிறது.**

**சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வே அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை முன்னெடுப்பதற்காகவும் புத்தாண்டை ஒட்டிய ஒரு நல்லெண்ண நடவடிக்கையாகவுமே அரசு முதற் தடவையாக இந்தக் கைதிகளை விடுதலை செய்வதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.**

விடுவிக்கப்பட்ட கைதிகளில் ஐவர் தமிழர்கள், மூவர் முஸ்லிம்கள், இரண்டு பேர் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களாவர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

- ராசா றோசலின் அருந்தவநாயகி - சின்னக்கடை, மன்னார்.
- மொகமட் ரபீக் பஷிலா - சின்னக்கடை, மன்னார்.
- இராஜலிங்கம் விக்கினேஸ்வரலிங்கம் - இராமநாதன் தொடர்மாடி, கொட்டாஞ்சேனை.
- யோசப் வின்சன்ட் சுரேஷ் - சின்னக்கடை - மன்னார்.
- ஹபீப் மொகமட் டிலினா- சின்னக்கடை, மன்னார்.
- வீரசிங்கம் சிவேந்திரன் - 74, பஸார் வீதி, வவுனியா.
- இராமச்சந்திரன் சுசிலக்குமார் - புலோப்பளை.
- மாயாண்டி பாண்டிதேவன்- ஆசிகுளம் வீதி, வவுனியா.
- ஹேரத் ஹேமபாலா - குனுகவவெவ, புனாவ.
- டி.ஏ.சிசிரகுமார - வவுனியா.

சமாதானப் பேச்சுக்கான சூழலை உருவாக்கும் நல்லெண்ண முயற்சியாகத் தமது பாதுகாப்பில் இருந்த சிங்கள மீனவர்களையும் போர்க்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அல்லைப்பிட்டியில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஏப்.12

ஊர்காவற்றுறைக்குத் தென் கிழக்கே அல்லைப்பிட்டியில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது ஆயுத தளபாடங்கள் மீட்கப்பட்டிருப்பதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

ரி56 மகஸின்கள் - 4, ரி56 ரக ரவைகள் - 120, கைக்குண்டு - 1 ஆகியவை உட்பட பல ஆயுத தளபாடங்களை மீட்டதாகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

### வவுனியா நகரப். பகுதி இருளில்

வவுனியா,ஏப்.12

வவுனியா நகரில் நேற்று மாலை இடி மின்னலுடன் கடும்மழை பெய்துள்ளது. இதனையடுத்து மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. இதனால் நகரம் இருளில் மூழ்கியது.

மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் உடனடியாகத் தெரியவரவில்லை.(ஐ-3)

### ஓமந்தைக்கு வடக்கே ஷெல் வீச்சு

கொழும்பு,ஏப்.12

ஓமந்தைக்கு வடக்கே இறம்பைக்குளம் படை முகாம் மீது நேற்று முன்தினம் பிற்பகல் விடுதலைப் புலிகள் ரி81மி.மீ.மோட்டார் தாக்குதலை மேற்கொண்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலின்போது படையினருக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

### விசாரணைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

யாழ்.மாநகரசபை சுகாதாரப் பிரிவில் அண்மையில் ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பான விசாரணைகள் நேற்று ஆரம்பமாகின.

திருகோணமலையில் இருந்து வந்த வடக்கு - கிழக்கு மாகாண

(12ஆம் பக்கம் பார்க்க)

## படை நடவடிக்கை கிழக்கில் தொடர்கிறது

மட்டக்களப்பு,ஏப்.12

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தை நோக்கி நேற்று முன்தினம் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தரவை ஊடாகப் படையினர் புலிகள் பிரதேசத்தை நோக்கித் தொடர்ந்து நகர்ந்து வருவதாகவும்- எனினும் மோதல்கள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் - செய்திகள் தெரிவித்தன.

படையினர் மேற்கொண்ட நகர்வை அடுத்து அப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த 400 குடும்பங்கள் கிரான், சந்திவெளி ஆகிய பகுதிகளில் உள்ள உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

## அரசின் யுத்தநிறுத்தத்தை ஐ.தே.க. வரவேற்கிறது

கொழும்பு,ஏப்.12

சிங்கள - தமிழ் புத்தாண்டை ஒட்டி அரசு அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தை வரவேற்கின்றோம். அதேசமயம் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கான திகதியை அரசு அறிவிக்கவேண்டும்.

ஐ.தே.கட்சியின் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அரசு அறிவித்துள்ள யுத்தநிறுத்தம் தொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

நாட்டில் தொடரும் யுத்தம் நிறுத்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் பட்ஜெட் 9 வாக்குகளால் நிறைவேறியது!

கொழும்பு,ஏப்.12

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இரண்டாவது பதவிக் காலத்தின் முதலாவது வரவு - செலவுத் திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் ஒன்பது மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.

கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்த விவாதத்தின் பின்னர் வரவு - செலவுத் திட்டம் நேற்று மாலை பெரும் பரபரப்புக்கு மத்தியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து 116 வாக்குகளும், எதிராக 107 வாக்குகளும் கிடைத்தன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் தமிழர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல் வல்லுறவுகளை தடுத்து நிறுத்துங்கள்!

### ஜனாதிபதியிடம் மன்னிப்புச்சபை கோரிக்கை

கொழும்பு,ஏப்.12

இலங்கையில் பரவலாக இடம்பெறும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துமாறும், குற்றமிழைப்போரை நீதியின் முன் நிறுத்துமாறும் சர்வதேச மன்னிப்புச்சபை ஜனாதிபதியிடம் கேட்டிருக்கிறது.

மன்னிப்புச் சபை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள பிந்திய கடிதம் ஒன்றில் இந்த விவரம் வெளியாகி இருக்கிறது.

தடுப்புக் காவலில் வைக்கப்படும் பெண்களின் பாதுகாப்புத் தொடர்பாக

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# T.V. விற்பனைக்கு

**JAPAN** நாட்டுத் தயாரிப்பான
**SONY KV** 2020, 2024, 2062
2064, 2068, 2090, 2092, 2096, 2100.

**NATIONAL - 2185**
**SONY AUDIO SET FH7, FH3, FH15,**
**SUN SUI, SET, AKAI**
**AUDIO DECK SET**

போன்றவை உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றன.

இல. 56, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.
142, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(86543)

## அராலி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 61ஆவது ஆண்டு விழா

இடம் : நிலாவொளி விளையாட்டுக் கழக மைதானம்
நாள் : 14.04.2001 சனிக்கிழமை (புதுவருட தினத்தன்று)
நேரம் : மாலை 6 மணி
தலைவர் : இ.குணேந்திரன்

பிரதம விருந்தினர்:
திரு.ந.திரிலோகநாதன் J.P.U.M.
*(தலைவர், வலி.மேற்கு பிரதேச சபை)*
சிறப்பு விருந்தினர்:
பேராசிரியர் திரு.சி.க.சிற்றம்பலம்
*(தலைவர், வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்)*
மற்றும் விருந்தினர்கள் பலர் கலந்துகொள்வார்கள்.

விசேட நிகழ்வாகப் பட்டிமன்றம், நாடகம், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும்.

*குறிப்பு:* நாளை (13.04.2001) வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு மரதன், சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெறும்.

-நிர்வாகம்.

*விளம்பர அன்பளிப்பு: சசி பல்பொருள் வாணிபம், அராலி கிழக்கு.* (86554)

## விண்ணக வாழ்வின்
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15 - 02 - 1925



விண்ணில்
12 - 04 - 2000

அமரர்
## பஸ்ரியன் றோமபாலா

*"ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மனதை விட்டு என்றும் மாறாதையா!"*

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

*115, ஸ்ரேஷன் றோட், யாழ்ப்பாணம்.* (86441)

# குரு பூசை

விஸ்வகுல பிராமண தவத்திரு. நாகலிங்க சுவாமிகள் குருபூசை இன்று(12-04-2001) வியாழன் 1 மணியளவில் விசேட ஆராதனையும் அன்னதானமும் சங்கானையில் உள்ள அவரது நினைவு ஆலயத்தில் நடைபெறும்.

ந.விக்கினேஸ்வரன்
ஆச்சாரி
*சங்கானை.* (86531)

## ஆரம்பத்திலிருந்து....

**2003**
**A/L கலைப் பிரிவு**
**எமது ஆசிரியர் குழு**

தமிழ்
*செல்வி பங்கையற்செல்வி*
இ.நாகரிகம்
*திரு.உமாசுதன்சர்மா*
அளவையியல்
*திரு.S.S.மனோகரன்*
கிறிஸ்தவம்
*திருமதி சுனித்தா*
நாடகம்
*திரு.ஸ்ரீகந்தவேள்*
புவியியல்
*திரு.ஞானேஸ்வரன்*
ஆங்கிலம்
*திரு.சுப்பிரமணியம்*
அரசியல்
*திரு.கேதீஸ்வரன்*

**BEACON**
*யாழ்நகர்*
*(வெலிங்டன் சந்தி)* (86520)

## நாகம்ஸ்
சுன்னாகம்
**விஜய், சிம்ரன், விவேக்**
நடித்த
## ப்ரியமானவளே
(ரீல்ஸ்) தினசரி 11.00, 2.30 (புதியநேரம்) (86572)

## ராஜா
யாழ்ப்பாணம்
**கார்த்திக், லைலா**
மற்றும் பலர் நடிப்பில்
## ரோஜாவனம்
காட்சிகள்: 10.30, 2.30 (புதிய நேரம்) (C/16006)

## லஷ்சுமி இணுவில்
**சரத்குமார், பிரபுதேவா, ஜெயாசீல், கபாலி, விவேக்** நடிப்பில்
## பெண்ணின் மனதைத்தொட்டு
(ரீல்ஸ்) காட்சிகள்: 11.00, 2.30 (பு.நே.)

# மக்கள் வங்கி
## அறிவித்தல்

எதிர்வரும் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் உள்ள சகல வங்கிக் கிளைகளும் 2001ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ஆம் திகதி இன்று வியாழக்கிழமை காலை 9 மணியிலிருந்து 10 மணிவரை மட்டுமே வாடிக்கையாளர்களுக்குத் திறந்திருக்கும் என அறியத்தருகின்றோம்.

**மக்கள் மனமறிந்த வங்கி**
# மக்கள் வங்கி

*பிரதேச முகாமையாளர்.* (C/16259)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

*யா/வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர்*



## திரு. முருகேசு செல்லையா
**(Dip. - Ag., Sp. Tr. Ag., SLPS 2-1)**

அவர்கள் அதிபர் சேவை தரம் இரண்டு ஒன்றுக்குப் பதவியுயர்வு பெற்றுள்ளமையையிட்டு அவரைப் பாராட்டுவதோடு அவர்களும் அவர் தம் குடும்பமும் பல வளமும் நலமும் பெற்று மேன்மேலும் புகழுடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தி இறை அருள் வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/வண்ணை
இளையதம்பி இந்து வித்தியாலயம்.

(86562)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில்
08 - 05 - 1938



விண்ணில்
14 - 03 - 2001

## திருமதி வல்லிபுரம் இராசமணி

**அன்பிற்கு ஓர் அன்னையாய்**
**பாசத்தின் ஓர் உறைவிடமாய்**
**பண்பின் ஓர் இலக்கணமாய்**
**எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்**
**வாழ்ந்து வழிகாட்டிய அம்மாவே!**
**உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

எமது அன்புத் தெய்வம் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்தும், எமது துயரில் பங்கு கொண்டும், உதவியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நாம் நன்றி கூறுவதோடு - நாளை (13.04.2001) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர் : கந்தன் வல்லிபுரம் (கொழும்பு)
பிள்ளைகள் : வரதராசா குடும்பம் (கனடா)
மகேஸ்வரன், இராமச்சந்திரன்,
நேசமலர், செல்வமலர்,
குணபாலசிங்கம், கவிதாஸ்,
சதீஸ் (கொழும்பு), நிதி (கொழும்பு),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

*சாந்தை,*
*பண்டத்தரிப்பு*
*(நாவற்குழி)* (86569)

# தேசிய சேமிப்பு வங்கி

சிங்கள, தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் (14.04.2001) சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை எமது சகல கிளைகளும் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காகத் திறந்திருக்கும் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அன்றைய தினம் புதிய கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கும் பண வைப்புச் செய்பவர்களுக்கும் புது வருஷப்பிறப்பை முன்னிட்டு கைவிஷேசம் வழங்கப்படும் எனவே இந்த நன்னாளில்

1) ரிதிரேகா கணக்கு
2) ஓய்வூதியத் திட்டம்
3) பிரார்த்தனா சிறுவர்களுக்கான கணக்கு
4) சேமிப்பு, நிலையான வைப்புக் கணக்கு

போன்றவற்றை ஆரம்பித்துப் பயனடையுங்கள்!

NSB

## "உங்கள் குடும்ப வங்கி"
## "YOUR FAMILY BANK"

முகாமையாளர்,
தேசிய சேமிப்பு வங்கி,
யாழ்ப்பாணம்.

(C/16280)

# உதயன்

## ஐந்து நாள் போதுமா...?

அப்பாடா! அரசாங்கமும் போர் நிறுத்தம் செய்யப்போகிறது!! நாளை நள்ளிரவில் இருந்து ஐந்து நாள்களுக்கு மட்டுமே அந்தப்போர் நிறுத்தம். இந்த 102 மணி நேரப் போர் நிறுத்தம் செய்வது குறித்துத் தீர்மானிப்பதற்காக எத்தனை மந்திராலோசனைகள் — மூத்த அமைச்சர்களுடன், படைத்தளபதிகளுடன் என்று!

கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி நள்ளிரவு தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தனர்.

சமாதான வழியில் அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதில் பெரும் ஆர்வம் இருப்பதாக அரசு கூறிவந்ததால், விடுதலைப் புலிகளின் ஒரு தலைப் பட்சப் போர் நிறுத்தத்துக்குப் பதிலாக, அதுவும் போர் நிறுத்தம் செய்யும் என்று— நான்கு மாதங்களுக்கு முன்னரே—மக்கள் எதிர்பார்த்தனர்.

ஆனால் அவர்கள் ஏமாந்தனர்; அரசு போர் நிறுத்தம் செய்யும் என்று நான்கு மாதங்களாக எதிர்பார்த்து ஏமாந்தனர். விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையை ஏற்றுக்கொண்டு பதிலுக்குப் போர் நிறுத்தம் செய்ய முடியாமைக்கு ஆட்சித்தலைவர்களும், படைத் தலைவர்களும் பல வகைக் காரணங்களைக் கூறி வந்தனர்.

புலிகளை நம்ப முடியாது; பேச்சுவார்த்தைகள் தொடங்கி முன்னேற்றம் காணும் பட்சத்தில் அரசு போர் நிறுத்தம் செய்வது குறித்துப் பரிசீலனை செய்யலாம் என்று நழுவல்—மழுப்பல்— நியாயம் கூறி வந்தது. இன்னமும் அந்த நிலைப்பாட்டை மாற்றவில்லை; மாற்றியிருந்தால் ஆகக் குறைந்தது ஒரு மாத காலத்திற்கேனும் போர் நிறுத்தம் அறிவித்திருக்கவேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கான திகதி இந்த மாதத்தில் நிர்ணயிக்கப்படும்; பேச்சுவார்த்தைகள் அநேகமாக அடுத்த மாதத்தில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படும் இவ்வேளையில்—

சமாதானத்திலும், அரசியல் தீர்விலும், பேச்சுவார்த்தைகளிலும் விருப்பம் கொண்டுள்ள அரசாங்கத்தினால் அதனைப் பிரதிபலிக்கும் வகையில், தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் விதத்தில், ஆகக் குறைந்தது ஒரு மாத காலத்துக்கேனும் போர் நிறுத்தம் அறிவிக்க முடியாமற் போனது ஏனோ?

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் செய்ததைத் தொடர்ந்து கடந்த நான்கு மாத காலமாகத் தமிழர் தரப்புகளில் இருந்து மட்டுமன்றி, தென்னிலங்கையின் நியாய சிந்தையுள்ள, சமாதானத்தை விரும்பும் தரப்புகளில் இருந்தும் —

அரசு போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதனால் உண்டாகக் கூடிய நற்பெறுபேறுகள் குறித்து மகஜர்கள், அறிக்கைகள் மூலம் விளக்கப்பட்டது. அத்தகைய மக்கள் விருப்பத்தைப் பொருட்படுத்தியேனும் ஒரு மாத காலப் போர் நிறுத்தத்தினை அரசு அறிவித்திருக்கலாம்.

அரசாங்கம் தனது மனதை மாற்றிக்கொள்ளக்காலம் கடக்கவில்லை. ஐந்து நாள் போர் நிறுத்தத்தை நீடித்து தான் போர்க்குணம் கொண்டதல்ல என்பதனை நிரூபிக்கலாம். அரசு அவ்வாறு செய்ய வேண்டும் என்பதே மக்கள் விருப்பமாகும். செய்யுமா?

# சமாதானத் தீர்வு முயற்சி குறித்து கத்தோலிக்க அமைப்பு மகிழ்ச்சி

கொழும்பு, ஏப். 12

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையின் இன நெருக்கடிக்கு மனிதநேயம் மிக்கதும், நியாயமானதுமான தீர்வொன்று புலிகளுக்கும், அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் மூலமாக ஏற்பட்டுவருவது குறித்து நீதி, சமாதானம், மனிதவிருத்திகான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழு தனது மகிழ்ச்சியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

இரு இனங்களுக்கும் இடையே நிலவும் வேறுபாடுகள் யுத்தத்தினாலும், வன்முறையாலும் தீர்த்துவைக்கப்படக் கூடியதல்ல, என்று இருதரப்பும் சம்பிரதாயத்திற்காக ஏற்றுக்கொண்டிருப்பது சமாதான விரும்பிகளுக்குப் பெருமகிழ்வைத் தருகிறது. இரு பகுதியினருக்கும் நாம் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தடைகளும், தடங்கல்களும் சமாதான முயற்சிகளின் போது ஏற்படுவது இயற்கை. இதனால் பல தியாகங்கள் செய்யப்படவேண்டியிருக்கும். சமாதானம் பல தியாகங்களை வேண்டி நிற்கிறது, அது இலகுவானதுமல்ல. எமது மதங்கள் எதுவானாலும் அவை வன்முறையைத் தூண்டுவனவல்ல

கடந்த சில தசாப்தங்களாக ஸ்ரீலங்கா பெரிதும் பாதிக்கப்பட்டு வந்துள்ளது. ஒரு புதிய ஸ்ரீலங்கா உருவாக வேண்டும். அங்கே இன, மத, கலாசார பேதமின்றி மக்கள் முன்னேற்றத்தின் சமமான பங்காளிகளாயிருத்தல் வேண்டும். உண்மையான சுதந்திரமும்; மதச்சிந்தனைகளின் வளர்ச்சியும் மேலோங்கி இருத்தல் வேண்டும். பேச்சுவார்த்தைகள் சமாதானத்தையும் சமரசத்தையும் ஏற்படுத்த வேண்டும். ஸ்ரீலங்காவின் சகல துறைகளிலும் இது வெளிப்பட்டு மிளிரவேண்டும்— இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

[க-20]

## இணைப்பாளராக தெரிவானோருக்கு அழைப்பு

வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் தீவகத்தில் இடம்பெறவுள்ள பயிற்சி நெறிகளுக்கு இணைப்பாளர்களாகப் பணிபுரிய நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் அளித்த யாழ் பல்கலைக்கழக மாணவர்களை இன்று தீவகத்தில் உள்ள தமது அலுவலகத்தில் சமூகம் அளிக்கும்படி ஈ.பி.டி.பி அமைப்புக் கேட்டுள்ளது. (ஐ-3)

## கத்தோலிக்க ஆயர் குழு 24 ஆம் திகதி வன்னி செல்லும்

### புலிகளின் பிரதிநிதிகளுடனும் பேசுவர்

யாழ்ப்பாணம், ஏப். 12

கொழும்பு நீதிக்கும் சமாதானத்துக்கும் அபிவிருத்திக்குமான ஆணைக்குழுவின் (செடெக்) ஏற்பாட்டில் கத்தோலிக்க ஆயர் குழு ஒன்று எதிர்வரும் 24 ஆம் திகதி வன்னிப் பகுதிக்குச் செல்லவுள்ளது

பத்து ஆயர்களை உள்ளடக்கிய இந்தக் குழுவினர் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள பொது மக்களின் நிலைமை குறித்து கேட்டறிவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அரச அதிபர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்தித்துப் பேச உள்ளதாகவும் கூறப்பட்டது. இரு தினங்கள் அங்கு தங்கியிருக்கும் அவர்கள் வன்னி நிலைவரம் தொடர்பாகவும் ஆராய்வர்.

(ம-6-4)

## மீண்டும் ஆயர் மல்கம் ரஞ்சித் தலைவராக தெரிவு

யாழ்ப்பாணம், ஏப் 12

அகில இலங்கை நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவராக மீண்டும் ஆயர் மல்கம் ரஞ்சித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உபதலைவராக மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப்பும் செயலாளராக அருட்தந்தை தேவராஜாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை அகில இலங்கைக் கத்தோலிக்க ஆயர் சங்கத்தின் உபதலைவராக யாழ். ஆயர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க-6-5)

## புத்தாண்டை முன்னிட்டு

## சீனி கிலோ 38 ரூபாவுக்கு விற்பனை செய்வதென முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 12

சித்திரைப் புத்தாண்டை ஒட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வியாபாரிகள் ஒரு கிலோ சீனியை 38 ரூபாவுக்கு விற்பனை செய்யவிருப்பதாக யாழ்ப்பாணத்துக்குப் பொருள்களைக் கப்பலில் ஏற்றும் வணிகர் கழகம் தெரிவித்துள்ளது.

கப்பலில் பொருள் ஏற்றுவதற்கான கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதையடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும்—

சீனியைத் தனியார் கடைகளில 38 ரூபாவுக்கும் மொத்தமாக 37 ரூபாவுக்கும் பொதுமக்கள் கொள்வனவு செய்யலாம் என்றும்—

அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ-3]

## படகுக்குள் தவறி வீழ்ந்து இளைஞன் காயம்

கப்பலில் பொருள்கள் இறக்கிக்கொண்டிருந்தவேளையில் தவறி இழுவைப்படகுக்குள் (பாட்ஜுக்குள்) வீழ்ந்து படுகாயமடைந்த இளைஞர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கரவெட்டி இராசகிராமத்தைச் சேர்ந்த தேசிங்கம் சுந்தரம் [வயது 18] என்னும் இளைஞனே காயமடைந்தவர் ஆவார். [ம-117]

## பாஷையூர் மீன் சந்தைக்கு நல்ல மவுசு

பாஷையூர் பிரதான மீன் சந்தைக்கு தற்போது நல்ல மவுசு ஏற்பட்டுள்ளது

பாஷையூர் சந்தையில், நல்ல மீன்கள் மலிவான விலையில் கிடைப்பதால் பாவனையாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. (க-17)

## கரப்பந்தாட்டம்

நல்லூர் பிரதேச சபையினால் சனசமூக நிலையங்களிடையே நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலி முடமாவடி ஞான வைரவர் விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ கொக்குவில் மனோன்மணி ச. ச. நிலைய அணி எதிர் கொக்குவில் கலைமகள் ச. ச. நிலைய அணி.

★ கோண்டாவில் வகீஸ்வரி ச. ச. நிலைய அணி எதிர் கோண்டாவில் வளர்பிறை ச. ச. நிலைய அணி.

★ கோண்டாவில் பாரதி ச. ச. நிலைய அணி எதிர் கோண்டாவில் விவேகானந்தா ச. ச. நிலைய அணி.

(ம-86)

## நாளை

பங்குனி 31

வெள்ளிக்கிழமை

திதி: பஞ்சமி

காலை: 7.27 வரை.

நட்சத்திரம்: கேட்டை

முற்பகல் 8.37 வரை

சுபநேரம்: 6.06 — 7.36

ராகுகாலம்: 10.36-12.06

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உண்மையிலும் உத்தமமான காரியத்திலும் மேன்மை பெறுவதற்கு எப்பொழுதும் நீங்கள் பாடுபடுங்கள்.

## கோழிகளுக்குத் தடுப்பூசி மருந்து

நெல்லியடி, ஏப். 12

யாழ் மாவட்டத்திலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு, கோழிகளுக்குரிய தடுப்பூசி மருந்துகள் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கோழிப்பண்ணையாளர்கள், தமக்குத் தேவையான தடுப்பூசிகளை, அவ்வப்பகுதி கால்நடை வைத்திய அலுவலகம் ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(க-109)

## ஊர்காவற்றுறையில் மேதினப் போட்டிகள்

ஊர்காவற்றுறை, ஏப் 11

மேதினத்தை முன்னிட்டுத் தீவக விளையாட்டுக்கழகங்களின் ஒன்றியமும் தீவக தொழிற்சங்கங்களும் இணைந்து கலை, கலாசார விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளன.

கரம் போட்டி 15, 16 ஆம் திகதிகளிலும் சதுரங்கப் போட்டி 17, 18 ஆம் திகதிகளிலும் பட்மின்ரன் போட்டி 9, 21 ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

சகல போட்டிகளும் குறித்த தினங்களில் காலை 9.00 மணி முதல் ஊர்காவற்றுறையில் நடைபெறவுள்ளன.

(க-16)

## கட்டுத்துவக்கு வெடித்து காயம்

வவுனியா, ஏப். 12

கட்டுத்துவக்கு வெடித்ததில் படுகாயமடைந்த வயோதிபர் ஒருவர் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அக்கராயன், யூனியன் குளத்தைச் சேர்ந்த நடேசு சோமு (வயது 70) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பன்றிக்கு வைத்த கட்டுத்துவக்கு வெடித்ததிலேயே இவர் படுகாயமடைந்தார்.

(ஐ-10)

## தேசியரீதியில் நடந்த போட்டியில் யாழ். மாணவர் பலர் வெற்றி

யாழ்ப்பாணம், ஏப் 12

'கியூடெக்' நிறுவனத்தின் குடிபோதை தவிர்ப்புக்கான விழிப்புணர்வுக் குழுவினரால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

''குடிபோதையை ஒழிப்போம்'' என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் 120 பேர் கலந்துகொண்டனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களில் 5 பேருக்கு பரிசில்களும் 15 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ முதலாம் இடம்:- ஐ. ஹேம பிருந்தினி (தரம் —9, யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி)

★ இரண்டாம் இடம்:- அ. அமுதினி (வளாக வீதி, திருநெல்வேலி) ஆ. கனிமொழி (தரம்—10 யாழ். வேம்படி மகளிர்).

★ மூன்றாம் இடம்:- ஏ. ஆர். பாத்திமா ஷகீறா (தரம் —13, முஸ்லிம் மகா வித்தியாலயம், சம்மாந்துறை).

★ நான்காம் இடம்:- நா. சிவஜெனனி (புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு).

★ ஐந்தாம் இடம்:- எம். எவ். றாஷீபா, காலி).

★ சான்றிதழ்களைப் பெறும் 15 பேரின் விவரம்:-

மு. வா. நஸ்லா, (தரம்-13 முஸ்லிம் ம. வி சம்மாந்துறை) கு. புஷ்பராணி (அல்வாய் மேற்கு), சி. தனுஷன் (தரம்-11, யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி), சி. கிருபாலினி (யாழ் கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம்), எம். பி. மொஹமட் இர்பான் (சம்மாந்துறை).

நடேசன் அமுதா (நாவலடி, மட்டக்களப்பு), ப. ஜனனி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி), எம். ஐ. கே. ஜெஹன் (தரம்-13, முஸ்லிம் ம. வி சம்மாந்துறை), த. பிரபு (யாழ். இந்துக் கல்லூரி), எஸ் எஸ். சிவானாதேசகம் (தரம் - 13, முஸ்லிம் ம. வி. சம்மாந்துறை)

வேலாயுதம் அகிலன் (வதிரி, கரவெட்டி வடக்கு), சிவசக்தி சிவானந்தவேல் (இன்பருட்டி, அல்வாய் வடக்கு), ஸ்டீபன் கெலன்ராஜ் (தரம்-11 யாழ் வதிரி திருஇருதயக் கல்லூரி), நிலானி சோமசுந்தரம் தரம் 11. வேம்படி மகளிர்). யசிந்தா இராமச்சந்திரன் (யாழ் வேம்படி மகளிர்).

இவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் விரைவில் வழங்கப்படவுள்ளதாக கியூடெக் நிறுவன இயக்குநர் தெரிவித்தார்.

(க-6-4)

### அமைச்சர் ஆறுமுகத்தின் கோரிக்கையின் பேரில்

# மலையகத்தில் படை முகாம்களை அகற்றுமாறு ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, ஏப். 12

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக, மலையகத்தில் அமைக்கப்பட்ட சகல முகாம்களையும் உடனடியாக அகற்றுவதற்கு, நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானிடம் உறுதியளித்த ஜனாதிபதி, அவர் முன்னிலையிலேயே இராணுவத் தளபதியுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மலையகத்திலுள்ள இராணுவ முகாமகளை உடனடியாக அகற்றுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளரும், கால்நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானும், நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கமும் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி திருமதி குமாரதுங்கவைச் சந்தித்து, நீண்ட நேரம் தமது பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக இருந்தால் தங்களது பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு பெற்றுத்தர வேண்டியதன் அவசியத்தை ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

மலையகத்தில் தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும், தோட்டப் புறங்களை அச்சத்தில் ஆழ்த்தும் இராணுவ முகாம்களை உடனடியாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான ஜனாதிபதியிடம் வலியுறுத்தினார்.

அதைத் தொடர்ந்தே முகாம்களை அகற்றும் உத்தரவை ஜனாதிபதி விடுத்தார்.

அதேவேளை அரசுடனான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிணைப்பை உறுதிப்படுத்தும் வகையில், நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கத்துக்குப் பிரதி அமைச்சர் பதவி ஒன்றை வழங்கவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததாகவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார். (க)

## நிவாரணப் பத்திரம் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 12

பச்சிளைப் பள்ளியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமத்திலும், வடமராட்சியிலும் தங்கியிருந்து பளைப்பிரதேச செயலகத்தினூடாக நிவாரணம் பெறுபவர்களுக்கான, நிவாரணப் பத்திரம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு வழமையான இடங்களில் வழங்கப்படும் என பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

## பொன்விழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 'நியூற்றோன் எலெக்ரிக்கல்ஸ்' ஸ்தாபனத்தின் பொன்விழா இன்று வியாழக்கிழமை கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நீண்டகால வாடிக்கையாவர்களான மின் இணைப்பாளர்கள் மூவர் கௌரவிக்கப்படுவதாக இந் நிறுவனத்தின் உரிமையாளர் து. அழகரத்தினம் தெரிவித்துள்ளார். (ஏ)

## பண்டிதர் வகுப்புகள் வார இறுதியில் நடைபெறா

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும்பாலபண்டிதர், பண்டிதர் பட்டப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வகுப்புகள் புதுவருட தினத்தை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறமாட்டா என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வாரம் முதல் மீண்டும் வழமைபோல் வகுப்புக்கள் நடைபெறும் எனவும் —

ஜீ சி.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கென தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்கள் பிரதி புதன்கிழமை தோறும் யாழ். காங்கேசன்துறை வீதியில் உள்ள பாரதி பாஷ்யவித்தியா சாலையில் நடைபெற்றுவருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது (க-7)

## மெல்லிசை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஏப். 12

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதிமுருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணிக்கு வானொலிப் பாடகர் கே. இராமநாதன் வழங்கும் மெல்லிசை இடம்பெறும்.

அறிமுகவுரையை ஆசிரியர் கே. தங்கவடிவேல் நிகழ்த்துவார். (க-7)

## புனித வார நிகழ்வுகள்

கிறிஸ்துபாடுகள், சிலுவை மரணம் உயிர்த்தெழுந்த புனித வார நிகழ்வுகள் மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை — கட்டைவேலி சேகர தேவாலயங்களில் இன்று வியாழன் தொடக்கம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வினை ஒட்டிய அருளுரைகள், ஆராதனைகள், வழிபாடுகள் முகாமைக்குரு அருட்செல்வி ஜெ. இரத்தினசிங்கம் தலைமையில் நடைபெறும். (க-173)

### யாழ். வீரர்கள் போட்டிகளில் பங்கேற்க

# நீச்சல் தடாகங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

### நல்லூர் பிரதேசசபை தலைவர் கூறுகிறார்

வலி. வடக்கு, ஏப். 12

யாழ். மாவட்டத்தில் ஏனைய விளையாட்டுத்துறைகள் போன்று, நீச்சல் போட்டிகளிலும் எமது இளைஞர், யுவதிகள் பங்கேற்க வேண்டும் என்பதற்காக இரண்டு நீச்சல் தடாகங்கள் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்கண்டவாறு நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் குறிப்பிட்டார்.

கோண்டாவில் மறுமலர்ச்சிக் கழகத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வு தலைவர் செ. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய க. மணிபல்லவராஜன் தொடர்ந்து பேசும்போது —

யாழ். மாவட்டத்தில் நல்லதோர் உள்ளக விளையாட்டரங்கு இல்லை. இக்குறைபாடு விரைவில் நீங்கிவிடும் இத்துடன் சுமார் 25 ஏக்கர் நிலப்பரப்பில் கோண்டாவில் பகுதியில் சர்வதேச மைதானமும் அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

மற்றும் நல்லூர்ப் பிரதேச சபையின் உபதலைவர் து. தவராசா, யாழ். மாவட்ட தாச்சி சங்கத் தலைவர் கா. பீதாம்பரம் ஆகியோரும் உரையாற்றினர். (க-86)

## கலைவிழா

ஆவரங்கால் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் புதுவருடக் கலைவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

காலையில் மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டப்போட்டிகளும், மாலையில் நாடகம், இசை நிகழ்ச்சி முதலியனவும் இடம்பெறும். (க-11)

## கைச்சங்கிலி யாருடையது?

யாழ்ப்பாணம், பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கைக்கும் அன்னசத்திர வீதிக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரங்களுடன் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கை, வேம்படி சித்திவிநாயகர் ஆலய பொருளாளரான சி. திருநாவுக்கரசு என்பவருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (க)

## அழைப்புக் கட்டளை

இல, 16 பிரிவு 55 (1)

மல்லாகம் என்னுமிடத்திலுள்ள / மாவட்ட நீதிமன்றத்தில்

வலி. கிழக்கு பிரதேச சபை,
அச்சுவேலி.

வழக்கு இல.
காணி 105

எதிர் வழக்காளி/கள்

இரங்கசாமி நமசிவாயம்,
கடை இல. 28,
பஸ் நிலையம் முன்பாக,
அச்சுவேலி.

எதிராளி/கள்

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/களுக்கு

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்காக

இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2001ஆம் ஆண்டு சித்திரை மாதம் 30 ஆம் நாளன்று, அல்லது அதற்கு முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிவிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
செ. விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

குறிப்பு: விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காகப் பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்த நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவுஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

வரைவு
ச. இளங்கோவன்
வழ. சட்டத்தரணி.

செ. விக்னேஸ்வரமூர்த்தி
(கையொப்பம்)
பதிவாளர்,
மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.

2001ஆம் ஆண்டு சித்திரை மாதம் 09ஆந் நாளாகிய இன்று

(சி/16242)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்


''தீவுப்பகுதி தெற்கு, வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெறுகின்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் (2001—04—17) செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. அத்துடன் அன்றைய தினம் ஊர்காவற்றுறை மக்கள் வங்கியினால் மாதம் ஒரு முறை நடைபெற்றுவரும் நடமாடும் வங்கிச் சேவையும் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடத்தப்படும் என்பதையும் அறியத்தருகிறேன்.

பிரதேச செயலர்,
வேலணை.

(சி/16279)

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 02 — 04 1939



மறைவு: 12 — 04 — 1991

### திருமதி துரைராஜா கோணேஸ்வரி

குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊருக்கு உத்தமியாய்
விண்ணுலகை நீயடைந்து
பத்தாண்டு சென்றதின்று
துயரென்னும் சாகரத்தில்
துவள்கின்ற எங்களுக்கு — உன்
நினைவுகளே ஒளியாகும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர்,

பிள்ளைகள்: மோகனராஜ் — சுவிற்சர்லாந்து,
கிரிராஜ் — சுவிற்சர்லாந்து,
லதா — ஜேர்மனி,
இந்துலதா — சுவிற்சர்லாந்து.
உதயராஜ் — சுவிற்சர்லாந்து.

மருமக்கள்: சுகேந்திரன் — ஜேர்மனி,
சிவகுமாரன் — சுவிற்சர்லாந்து,
வசந்தராணி — சுவிற்சர்லாந்து,

பேரப்பிள்ளைகள்: விதுசன், விதுலன்.

மு. துரைராஜா,
93, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-16262)

## தனிமனித கௌரவத்தைப் பாதிக்கும்
# படையினரின் முறையற்ற செயற்பாடுகளை அரச அதிகாரிகள் கண்டிக்க வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.12

தனிமனித கௌரவத்துக்கும் வாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் இராணுவச் செயற்பாடுகளை அரச உயர்மட்டத்தில் உள்ள சகல அதிகாரிகளும் கண்டிக்க முன்வரவேண்டும்.

-இவ்வாறு யாழ்பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

மன்னாரில் இரு தமிழ்ப் பெண்கள் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து அச்சங்கம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

மன்னாரில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த சமயம் விசாரணைக்காக கடற்படையினரால் இரவு வேளையில் அழைத்துச் செல்லப்பட்ட இரு இளம் குடும்பப் பெண்கள மனிதாபிமானமற்ற முறையில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

இலங்கை அரசின் ஆயுதப்படைகளிலும் பொலீஸிலும் உள்ள ஒரு சிலர் இத்தகைய மிகக் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டு வருவது இதுதான் முதற்றடவை என்றல்ல. இவ்வாறான சம்பவங்கள் கல்விச் சூழலிலுள்ள புத்திஜீவிகளாகிய எம்மை மட்டுமல்ல முழு இலங்கைச் சமூகத்தையுமே வெட்கப்பட்டு, அவமானப்பட்டுத் தலைகுனிய வேண்டிய நிலைக்குள்ளாக்கியுள்ளன.

சமாதானத்திற்காக ஓர் அரிய சந்தர்ப்பம் கனிந்து வரும் இந்த நேரத்தில் இராணுவத்தினரின் வல்லுறவு நடவடிக்கைகள் உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்களை சொல்லொணாத் துயரத்துக்குள் ஆழ்த்தியுள்ளது. இந்த நிலை மீண்டும் தொடராதிருக்க வேண்டும்.

அதற்கான உகந்த பாதுகாப்பு நெறிமுறைகளை பாதுகாப்புப் படையிலுள்ள உயர்மட்ட அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும். பாதுகாப்புப் படைகளின் உயர் மட்ட அதிகாரிகள் அரசியல்வாதிகளாக மாறக் கூடாது. அதேவேளையில் அரசியல் வாதிகளும் இராணுவ அதிகாரிகளாக மாறக்கூடாது.

நாட்டு நலன், மக்கள் நலன், பண்பாட்டுச் சூழல், பாதுகாப்புக்கு அடிப்படையான தனிமனித உரிமைகள் என்பன பாதுகாக்கப்படவேண்டியவை என்பதில் உயர்மட்ட ஆயுதப்படை, பொலீஸ்படை உத்தியோகத்தர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்பதை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றது. தேவையற்ற கைதுகள், குற்றமற்றவர்களைத் தண்டிக்கும் மனப்போக்கு போன்றவை ஒட்டுமொத்தமாகக் கைவிடப்படவேண்டும் என்பதையும் இச்சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றது.

அரச உயர்மட்டத்திலுள்ள சகல ஊழியர்கள் தனிமனித கௌரவத்துக்கும், வாழ்விற்கும் பங்கத்தை ஏற்படுத்தக்கூடிய இராணுவ நடவடிக்கைகளை ஏகோபித்த குரலில் கண்டிக்க முன்வரவேண்டும். எமது சமூகத்தின் மத்தியில் வாழும் எமது நாட்டு ஆயுதப்படையினரும், பொலீஸாரும் எமது பண்பாட்டைச் சீரழிக்கும் நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டு வாய்மூடி மௌனமாக இருக்க முடியாது என்பதை இத் தருணத்தில் யாழ்ப்பாண ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது. எதிர்காலத்தில் சமாதான சகவாழ்வு ஒன்றிற்கான பண்பாட்டுச் சூழலை இலங்கை ஆயுதப்படையினரும் பொலீஸாரும் இணைந்தே உருவாக்க முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மானசீகமாகக் கேட்டுக்கொள்கின்றது. மேற்படி துர்ப்பாக்கிய சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்டோரினதும், அவர்களது குடும்பத்தினரதும் துயரத்தில் நாம் பங்குகொள்கிறோம். மேற்படி சம்பவம் தொடர்பாக அடையாளம் காணப்படும் ஆயுதப் படை, பொலீஸ் சேவையைச் சேர்ந்த குற்வாளிகளுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாத வகையில் தண்டனை வழங்குதல் அவசியம். அதன் மூலமே எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவம் நடைபெறா வண்ணம் காக்கமுடியும்.

இத்தகைய பாரிய மனித உரிமை மீறல் நடவடிக்கைக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனச் சம்பந்தப்பட்ட அனைவரையும் இச் சங்கம் கேட்டுக்கொள்கின்றது. மலரும் தமிழ் - சிங்களப் புத்தாண்டிலாவது அனைவரும் துயரச் சம்பவங்களிலிருந்து விடுபட்டு, நிம்மதிப் பெருமூச்சு விட இறைவன் அருள்பாலிப்பானாக. (ம-6)

## மின் வழங்கக் கோரிக்கை

அரியாலை,ஏப்.12

கொழும்புத்துறை மேற்கு விபுலாநந்தர் வீதி, வில்வம் தெரு வீதி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீண்டும் அங்கு மீளக்குடியமர்ந்துள்ளதை அடுத்து இந்தப் பகுதிகளுக்கும் மின்சாரம், குடிதண்ணீர் ஆகிய வசதிகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள மின்சாரக் கம்பிகள் அறுந்து சேதமடைந்துள்ளன. பல மின்கம்பங்களும் முறிந்துள்ளன. இவற்றைச் சீர்செய்து மின் விநியோகத்தை ஏற்படுத்தித் தருமாறு இந்தப் பகுதி மக்கள் மின்சார சபை பொறியியலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-17)

# புதுவருஷப் பிறப்புக் கருமம்

"விஷு" வருஷம் சித்திரை முதலாம்நாள் நாளை(13.04.2001) வெள்ளிக்கிழமை இரவு பிறக்கின்றது. புழக்கத்தில் உள்ள வாக்கியம், திருக்கணிதம் ஆகிய பஞ்சாங்கங்களில் புதுவருஷப் பிறப்புக் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் அவற்றில் உள்ளவாறு இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன.

### வாக்கிய பஞ்சாங்கப் பிரகாரம்:-

கலியுகாதி சுத்ததினம் 1863547 நாடி 38 விநாடி 26 தற்பரை 15இற்குச் சரியான விக்கிரம வருடம் பங்குனி மாதம் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன்னிரவு நாடி 38 விநாடி 26 (மணி 9-27) அபரபக்ஷ ஷஷ்டித் திதியில், மூல நக்ஷத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் பரிகநாம யோகத்தில், வணிசக் கரணத்தில் விருச்சிக லக்கினத்தில் விருச்சக நவாம்மிசத்தில் புதன் காலவோரையில் குரு சூக்குமவோரையில் தாமத குண வேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய கோழி நடைத் தொழிலும் சூக்கும பக்ஷி அரசுத் தொழிலும் செய்யுங்காலத்தில் புதிய விஷு வருஷம் பிறக்கின்றது. அன்று பிற்பகல் நாடி 28 விநாடி 26 (மணி 5-27) முதல் அன்றிரவு நாடி 48 விநாடி 26 (மணி 1-27) வரை விஷு புண்ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து * மருத்துநீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கமிலையும் வைத்து * ஸ்நானஞ் செய்து வெள்ளை நிறமுடைய பட்டாயினும் வெள்ளைக்கரை சிவப்புக் கரை அமைந்த புதிய ஆடையாயினும் உடுத்து பவளமிழைத்த ஆபரணமணிந்து சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி தத்தம் குல தெய்வ வழிபாடு செய்து இயன்ற தானதருமங்கள் இயற்றி குரு, பெற்றோர் முதலியோரை வணங்கி அவர்களின் ஆசி பெற்று உற்றார், நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உண்டிகளுடன் கடுகு, புளி, எள், நெல்லிக்கனி சேர்த்தருந்தி கண்ணாடியில் முகதரிசனம் செய்து புதிய வருஷ பலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து தத்தம் சமய நூல்களைப் பாராயணம் செய்து மங்களகரமாகச் சயனம் செய்க.

மறுநாளாகிய விஷு வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை வைகறையில் துயில் எழுந்து மனத் தூய்மையுடன் வழிபடும் கடவுளைத் தியானித்து தான் முன்செய்தவைகளையும் மேற்செயற்பாலனவாகிய அறம் பொருள், இன்பங்களையும் நன்காராய்ந்து சிந்தித்து கண்ணாடி தீபம், நிறைகுடம், தனது வலக்கை, தாய், தந்தையர், ஆசிரியரின் பாதம், தேவதைகளின் திருவுருவம், திருமுறைப் புத்தகம், தாமரை முதலிய பூக்கள், பழ வகை, மஞ்சள் குங்குமம், சந்தனம், வெற்றிலை பாக்கு, முதலிய மங்களப் பொருள்களைத் தரிசித்து நித்திய நைமித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துத் தத்தம் வீடுகளிலே சூரியனுக்குப் பொங்கல் பூசை வழிபாடு செய்து முன்போல போசன பூசனாதிகள் செய்து மங்களகரமாக வாழக் கடவர்.

**மருத்துநீர்:-** தாழம்பூ, தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்தில் இட்டு காய்ச்சிக் கொள்க.

**சங்கிரம தோஷ நக்ஷத்திரங்கள்:-** அச்சுவினி, கார்த்திகை 2, 3, 4ஆம் கால், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ஆம் கால், மகம், மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால் இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து தான தரும வழிபாடு செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்.

**கைவிசேஷம்:-** 14.04.2001 சனிக்கிழமை - காலை 6.11 மணி முதல் 7.49 மணி வரை, காலை 8.01 மணி முதல் 8.33 மணி வரை

### திருக்கணித பஞ்சாங்க பிரகாரம்:-

விக்கிரம வருஷம் பங்குனி மாதம் 31ஆம் திகதி (13.04.2001) வெள்ளிக்கிழமை நடுஇரவு உதயாதி நாளிகை 44.05 (மணி இரவு 12.13) இல் "விஷு" என்னும் பெயருடைய புதுவருஷம் பிறக்கின்றது. அன்று நட்சத்திரம் மூலம். திதி அபரபட்ச ஷஷ்டி. அமிர்தயோகம். இது அறுபது வருட சுற்று வட்டத்தில் 15ஆவது வருஷமாகும். வெள்ளிக்கிழமை இரவு நாளிகை 34.05 (மணி இரவு 8.13) தொடக்கம் பின்னிரவு நாளிகை 54.05 (மணி பின்னிரவு 4.13) வரையும் மேட சங்கிரமண புண்ணிய காலம் என்று சொல்லப்படும். வருஷம் பிறக்கும்போது உதய லக்கினம் "தனுசு" ஆகும்.

இப்புண்ணிய காலத்தில் சகலரும் சங்கற்பபூர்வமாக மருத்துநீர் தேய்த்து தலையில் புங்கமிலையும் காலில் ஆலிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெண்மஞ்சள் பட்டாயினும் அல்லது மஞ்சள் கரை வைத்த வெள்ளை புது வஸ்திரமாயினும் தரித்து வைரம் பதிக்கப்பெற்ற ஆபரணங்களை அணிந்து நித்திய கர்மானுஷ்டானம் முடித்து விநாயகர் முதலிய இஷ்ட குல தேவாராதன தரிசனங்கள் செய்து பெரியோர், குரு, பெற்றோர் முதலியோரை வணங்கி அவர்கள் ஆசி பெற்று பால் அன்னம் புளியோதரை நெல்லிக்காய் துவையல் முதலியவற்றுடன் அறுசுவை பதார்த்தங்களையும் போசனம் செய்து புதுப் பஞ்சாங்கப் பலன்களைக் கேட்டு சயனிப்பார்களாக.

மறுநாள் சனிக்கிழமை அதிகாலை எழுந்து ஸ்நானம் செய்து, நித்திய கருமங்களை முடித்து கண்ணாடி, தீபம், பூரண கும்பம் முதலான மங்கலப் பொருள்களைத் தரிசித்து சூரியனுக்குப் பொங்கல், பூஜை வழிபாடுகள் செய்து விருந்தினர்களை உபசரித்து பிதிர் விரதானுசாரிகள் சிரார்த்தம் தர்ப்பணம் என்பன செய்து நண்பர்கள் விருந்தினர்களுடன் முன்போல் போசனம் செய்து, தாம்பூலம் அருந்தி, சுகந்த சந்தன புஸ்பாதிகளை அணிந்து புதுவருடத்தில் ஆற்றக்கூடிய நற்கருமங்களைச் சிந்தித்து மங்களகரமாக வாழ்வார்களாக.

**சங்கிரம தோஷ நட்சத்திரங்கள்:-** அசுவினி, கார்த்திகை 2,3,4 ஆம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் கால்கள், மகம், மூலம் பூராடம், உத்தராடம் 1ஆம் கால்.

**மருத்துநீர்:-** தாழம்பூ, தாதுமாதுளம்பூ, தாமரைப்பூ, துளசி, வில்வம், அறுகு, பால், கோமயம், கோசலம், கோரோசனை, குங்குமப்பூ, பச்சைக் கற்பூரம், மஞ்சள், சுக்கு, திற்பலி ஆகியவற்றை சுத்த ஜலத்தில் இட்டுக் காய்ச்சிய கஷாயமாகும். பூ வகை கிடையாவிடின் அவைகளின் இலை, பட்டை, வேர், கிழங்கு யாதாயினும் உபயோகிக்கலாம்.

**கைவிசேஷம்:-** 14.04.2001 சனிக்கிழமை - காலை 6.34 மணி முதல் 8.10 மணி வரை

15.04.2001 ஞாயிற்றுக்கிழமை - காலை 6.34 மணி முதல் 7.46 மணி வரை.

18.04.2001 புதன்கிழமை இரவு 8.08 மணி முதல் 8.56 மணி வரை.

# ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் இடம்பிடித்த ஈழகேசரிச் சிறுகதைகள்

## படைப்பாளிகள் கௌரவிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.12

ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் ஒரு காலகட்டமாக விரியும் ஈழகேசரியில் வெளிவந்த ஏழு சிறுகதைகளும் ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் முக்கிய சிறுகதைகளாக அமையும்.

இவ்வாறு குறிப்பிட்டார் பிரபல நாவலாசிரியர் செங்கை ஆழியான்.

அண்மையில் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் 'ஈழகேசரி சிறுகதைகள்' அறிமுக விழாவும் படைப்பாளிகள் கௌரவிப்பும் இடம்பெற்றது. அதில் தலைமை உரையாற்றுகையிலே அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

1936 ஆம் ஆண்டு முதல் 58 ஆம் ஆண்டு வரையான காலகட்டம் புதுமை வாய்ந்தது. தமிழகத்தில் மணிக்கொடி காலமெனவும், ஈழத்தில் மறுமலர்ச்சிக் காலம், ஈழகேசரிக் காலமெனவும் புதுமை சேர்க்கும் இலக்கியப் படைப்புகளின் காலமாக இது விளங்கியது.

ஈழகேசரி 1930 முதல் 1958 வரை வெளிவந்தது. இது ஈழத்துப் புனைகதை வரலாற்றில் மிக முக்கியத்துவமுடைய பங்களிப்பை ஆற்றியிருக்கிறது. 107 படைப்பாளிகளின் 564 சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்தன.

இவை ஏதோவொரு வகையில் மண்ணைப் பிரதிபலிப்பனவாக இருந்தன.

ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளாக சம்பந்தன், சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன் ஆகியோரையே கூறுவர். இவர்களது படைப்புகள் அல்லயன்ஸ் வெளியீடாக இந்தியாவில் வெளிவந்தமையே இதற்குக் காரணம். ஆனால் இது ஒரு சரியான கணிப்பீடல்ல.

அக்காலத்தில் நவீன சிறுகதையை ஆரம்பித்து வைத்தவர் ஆனந்தன் என்பது மறுக்கமுடியாத உண்மை.

அக்கால கட்டம் சமுதாய சீர்திருத்தக் காலம் எனப்பட்டது. சாதியக் கொடுமைகளுக்கு எதிராக நவீன சிறுகதைகளை முதலில் எழுதியவர் ஆனந்தன் என்ற பண்டிதர் சச்சிதானந்தனே. ஈழத்துச் சிறுகதை வரலாற்றின் முக்கிய ஏழு சிறுகதைகளைக் குறிப்பிடுவதாக இருந்தால் அது ஈழகேசரி சிறுகதைகளாகத்தான் இருக்கும் - என்றார்.

### செம்பியன் செல்வன்

நூல் அறிமுகவுரையினைச் செம்பியன் செல்வன் ஆற்றினார். அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:-

ஈழத்து வரலாற்றில் பத்திரிகைகளை முன்வைத்தே நவீன இலக்கியங்களைக் காலகட்டங்களாக வகுப்பர். டொனமூர் அரசியல் யாப்பின் வழியாக அரசியலில் ஒரு முனைப்பை ஏற்படுத்தவேண்டுமென்ற பின்னணியில் நா.பொன்னையா ஈழகேசரியை உருவாக்கினார். சேர் பொன்.இராமநாதனைக் கேசரியாக முன்வைத்து, தமிழரது உரிமைகளைப் பத்திரிகையின் வாயிலாகப் பரப்பும் நோக்கம் ஈழகேசரிக்கு இருந்தது.

ஈழகேசரியில் வெளிவந்த கதைகள் குறித்த சான்றாதாரங்கள் தற்போது நம்மிடம் இல்லை. இந்நூல் அக்குறையை நீக்குகிறது.

பழைய எழுத்தாளர்களின் பின்னணியை முழுமையான படைப்புக்களை அறியக்கூடிய ஆவணங்கள் நம்மிடம் இல்லை. இந்தியாவில் ஜெயகாந்தன் பற்றி சா.கந்தசாமி என்ற படைப்பாளர் ஒரு விவரணப் படம் தயாரித்துள்ளார். அத்தகைய ஒரு முயற்சி இங்கும் அவசியமானது. ஈழகேசரிப் படைப்பாளிகள் பொதுவாக தமிழாசிரியர் பரம்பரை, பண்டிதர் பரம்பரையில் இணைந்து வந்தவர்களாக விளங்குகின்றனர். அவர்கள், வரலாற்றில் இடம்பெற்று விட்டனர் - என்றார்.

### கலாநிதி எஸ்.சிவலிங்கராசா

எழுத்தாளர் கௌரவிப்புரையை கலாநிதி எஸ்.சிவலிங்கராசா நிகழ்த்தினார். அவர் தனது உரையில் கூறியதாவது:-

ஈழத்தின் தரமான - சிறப்பான - பல விடயங்களையும் உள்ளடக்கிய பத்திரிகை ஈழகேசரி. அதில் முகிழ்த்த கௌரவம் பெறும் எழுத்தாளர்கள் ஒருபோதும் மரணிக்க மாட்டார்கள்.

இந்த மண்ணின் படைப்பாளர்களை அணுகி, அவர்களோடு ஊடாடி, அவர்கள் தொடர்பான தகவல்களை அவர்கள் வாய்மொழியிலேயே பெறறு ஆவணப்படுத்தும் பணியை நமது தமிழ்த்துறை மேற்கொண்டு வருகிறது. அளவெட்டி சீ.விநாசித்தம்பி முதல் பலருடைய தகவல்கள் இவ்வாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பு மற்றும் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் உள்ளவர்களுடன் கூட தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைப் பெறுகின்றோம். பல்கலைக்கழக தமிழ்த் துறை படைப்பாளர்களுக்குச் செய்யும் ஒரு கௌரவமாக இது அமைகிறது - என்றார்.

தொடர்ந்து கலாநிதி சிவலிங்கராசா கௌரவம் பெறும் ஆறு மூத்த படைப்பாளிகளுக்கும் பொன்னாடை போர்த்தினார்.

சொக்கன், புதுமைலோலன், வரதர், சு.வே., செ.நடராசா, ஆனந்தன் ஆகிய படைப்பாளிகள் பற்றி இயல்வாணன், சாரங்கா, க.தணிகாசலம், தாட்சாயினி, கொன்ஸ்ரன்ரைன், உடுவில் அரவிந்தன் ஆகியோர் முறையே குறிப்புக்களை முன் வைத்தனர்.

### கோகிலா மகேந்திரன்

நூல் மதிப்புரையை கோகிலா மகேந்திரன் ஆற்றினார். அவர் தனது உரையில் சொன்னதாவது:-

கலை என்பது ஓர் உணர்வினை அல்லது பெறுமானத்தை வெளிப்படுத்துவதிலும் தொடர்புறுத்துவதிலும மனிதனின் திறன் வெளிப்படும் முறைமை ஆகும். அறிவும் ஆராய்ச்சியும் கொண்டிருப்பது அறிவியல். உணர்வும் கற்பனையும் கொண்டு மிளிர்வது கலை. ஊன்றி நின்று நடப்பது போன்றது அறிவியல். தாவிப் பறப்பது கலை.

எமது இலக்கியப் படைப்புகள் தொடர்பாக நாம் பல்வேறுபட்ட விமர்சனங்களைச் செய்யவேண்டும். ஏனெனில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட சிறுகதைகளை விட, மிகச் சிறந்த சிறுகதைகளை இந்த நூலில் தரிசிக்க முடிகிறது. குறுகிய காலத்தில் தேர்ந்த வாசிப்பை மேற்கொள்வதற்கு இச்சிறுகதைத் தொகுதி பெரிதும் உதவும் - என்றார்.

படைப்பாளிகள் சார்பில் க.சொக்கலிங்கம் பதிலுரை நிகழ்த்தினார். புத்தொளி ந.சிவபாதம் வரவேற்புரையையும், கல்வயல் வே.குமாரசாமி நன்றியுரையையும் ஆற்றினர். முன்னதாக மறைந்த மூத்த எழுத்தாளர் வ.அ.இராசரத்தினத்துக்கு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

(ம-27)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 24 . 04 . 1912 — மறைவு 13 . 03 . 2001

## திருமதி சின்னப்பிள்ளை சின்னையா

"உடலது தான் பிரிந்த போதும் உள்ளமது
உம் நினைவால் உயிர்த்திருக்கும் உள்ளமட்டும்"

இன்று (12.04.2001) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*"கலையகம்",*
*வராத்துப்பளை,*
*பருத்தித்துறை.*

வ.தேவசகாயம்,
(மருமகன் குடும்பத்தினர்)

(86505)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



## திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம்

(திருமதி P.R.P.சிங்கம் ஓவசியர் சரவணை)

அன்னையின் மடியில் 21 - 10 - 1921 — ஆண்டவன் அடியில் 13 - 03 - 2001

கடந்த (13-03-2001) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தாயார் திருமதி பரநிருபசிங்கம் பாக்கியம் அவர்களின் மரணச் செய்தி கேட்டு எமது இல்லம் நாடி ஓடோடி வந்து பல உதவிகள் செய்த உறவினர்கள், அயலவர்களுக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் பல உதவிகள் புரிந்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும், வெளிநாட்டு அன்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்திகள் மூலம் துக்கம் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (12-04-2001) வியாழக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் அந்தியேட்டிக் கிரியைகள் நிகழ்விலும், அதனைத் தொடர்ந்து நண்பகல் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*15/15, மாரியம்மன் வீதி,*
*திருநெல்வேலி.*

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(86506)

## குப்பிவிளக்குத் தவறி விழ்ந்து தீக்காயம்

யாழ்ப்பாணம்,ஏப்.12

குப்பிவிளக்கு வெளிச்சத்தில் பத்திரிகை படித்துக் கொண்டிருந்தவர் அக் குப்பிவிளக்கு தட்டுப்பட்டு வீழ்ந்ததில் எரிகாயங்களுக்குள்ளானார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் நயினாதீவைச் சேர்ந்த எஸ்.சந்திரன் (வயது 42) என்பவரே தலையிலும் நெற்றியிலும் கையிலும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-9)

## மண்டுவில் ஆலயத்தில் பொங்கற் பூசை

தென்மராட்சி,ஏப்.12

சாவகச்சேரி வடக்கு மண்டுவில் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் கடந்த திங்களன்று பங்குனித்திங்கள் பொங்கற் பூசை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு க.கிருபானந்தக்குருக்கள் தலைமையில் சென்ற பொதுமக்கள் ஆலயத்தில் பொங்கல், நீர்க்கஞ்சி தயாரித்ததுடன் அபிஷேகப் பூஜை ஆகியவற்றை நடத்திவிட்டு திரும்பினர்.

அத்துடன் அப்பகுதியில் உள்ள வீரபத்திரர் ஆலயத்திலும் பத்து மாதங்களின் பின்னர் பூஜைகள் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கல்வித் தரத்தை மேம்படுத்த முயற்சி

தென்மராட்சி,ஏப்.12

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 11ல் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்வதற்கு வலய அலுவலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டிசெம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்காக பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெற்று பின்டைவான நிலையில் உள்ள மாணவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. (ஐ117)

# கண்ணீர் அஞ்சலி

முல்லையடி - வண்ணாங்கேணி
கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவர்

## திரு.வை.கனகலிங்கம்

அவர்களின் மறைவையிட்டு மனவேதனையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பளை. - முல்லையடி வண்ணாங்கேணி
கிராம அபிவிருத்திச் சங்கம்.

(C/16250)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 . 10 . 1955 — மறைவு 25 . 03 . 2000

## பொன்னுத்துரை சத்தியசீலன்

திதி:-12.04.2001

பாரினில் புகழ் ஓங்க மாண்புடன் வாழ்ந்த
எம் அன்புத் தெய்வமே! தந்தையே!
எம்மை விட்டுப் பிரிந்தோடி ஆண்டொன்று சென்றதையா!
என்றும் எம் துயரம் ஆறாது!
பாச தீபம் என்றும் அணையாது!

*நவாலி களை ஓடை,*
*அம்மன் வீதி,*
*மானிப்பாய்.*

(C/16204)

உம் பிரிவால் துயரடையும்
மனைவி, பிள்ளைகள்.

GRAND SALE! GRAND SALE!! GRAND SALE!!!

சீமாட்டியின்
மகோன்னத மாபெரும் மலிவு விற்பனை!

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட
தரம் மிக்க புத்தம் புதிய ஜவுளித் திணுசுகள்
என்றும் எங்கும் எப்போதும் கிடைக்காத மலிவு விலையில்....

'சீமாட்டி' புடைவைக் கடலில்
விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன!

ஆடவர், மகளிர், சிறுவர், சிறுமிகள் அனைவருக்கும் ஏற்ற விதம் விதமான, கண்ணைக்கவரும் புது டிசைன்களில் ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள் வண்ண வண்ணக் கலரில் எண்ணம்போல் தெரிவு செய்திட நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

சீமாட்டி புடைவைக் கடல்

கூறைக்கூத்தப் பட்டுப்புடைவைகள், கூறைச்சேலைகள், பட்டுவேட்டிகளின்
கைராசியான ஒரே நிறுவனம்

சீமாட்டி புடைவைக் கடல்

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
இதே மலிவு விற்பனை எமது ஒரே கிளை நிறுவனமான

மன்னா சில்க்

15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்
என்ற புடைவை அகத்திலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

T.P. -2196 (C/16134) FAX-2102

GRAND SALE! GRAND SALE!! GRAND SALE!!!

மாபெரும் மலிவு விற்பனை!

புத்தாண்டை முன்னிட்டு அனைத்துப் புடைவை ரகங்களும் உங்கள் மனம் போல் தெரிவுசெய்து மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

விநாயகர் புடைவையகம்

இல.63A, 62A, 61,
நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.

(C/16119)

# அரசமைப்பு திருத்த திட்டத்தின்படியே புலிகளுடனான பேச்சு அமைய வேண்டும்

## சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் கூட்டறிக்கை

கொழும்பு,ஏப்.12

முன்னைய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசமைப்புச் சீர்திருத்த தீர்வுத்திட்டத்தின் அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளுடனான உத்தேசப் பேச்சுவார்த்தை அமைய வேண்டும்.

இவ்வாறு இலங்கை சமசமாஜ கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளன.

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் வருமாறு:-

இலங்கை சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வர, சமாதான முயற்சிகளுக்கு எப்போதும ஆதரவளித்து வந்துள்ளன.

தற்போது தொடரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர சர்வதேச சமூகம் எடுத்துவரும் முயற்சிகளையும் நாம் வரவேற்கிறோம். இலங்கையின் அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்பட்டாலேயே அமைதியை எட்ட முடியும்.-

ஆகக் குறைந்தது, பிரதான கட்சிகளான சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக்கட்சியும் ஒப்புக்கொண்ட அரசியல் தீர்வுத்திட்டம் ஒன்று, மற்றொரு நாட்டின் உதவியுடன், பேச்சின்போது முன்வைக்கப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின்போது இத்தகைய முன்னேற்பாடு இல்லாவிட்டால், தொடரும் போரின் மற்றொரு நிலைக்கே நாடு கொண்டு செல்லப்படும்.

பேச்சுக்கான அடிப்படையும், தீர்வும் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவனவாக அமையவேண்டும்.

சகல கட்சிகளாலும் ஒப்புக்கொளளப்படும் தீர்வுத்திட்டம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்படவும் -

சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவும் - வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில், விடுதலைப் புலிகளுடனான பேச்சு, பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளிடையேயும், மற்றைய கட்சிகளிடமும் விவாதிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் அமைய வேண்டும் என்று சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் கருதுகின்றன.

- இவ்வாறு அறிக்கையில் மேலும குறிப்பிடப்பட்டுள்ளது. (க-ஓ)

# யாழ்.உள்ளூராட்சித் திணைக்கள செயற்பாடுகள் சிறப்பானவை

## ஆணையாளர் பாலசிங்கம் பாராட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.12

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் இயங்குகின்ற பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களங்களில் யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தின் செயற்பாடுகளே திருப்திகரமாகவும் சிறப்பாகவும் உள்ளன.

இவ்வாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற உள்ளூராட்சி உதவியாளர்களுடனான சந்திப்பில் உரையாற்றிய வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் வெ.பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்கள் பற்றிய அறிமுகம், அதன் செயற்பாடுகள், அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்பட்ட இச் சந்திப்பில் பிரதேசசபை, நகரசபை ஆகியவற்றின் செயலாளர்கள், உள்ளூராட்சி அபிவிருத்தி உதவியாளர்கள், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்கள் உதவி ஆணையாளர் அலுவலகப் பொறியியலாளர், சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர், ஆய்வு உத்தியோகத்தர், தொழில் உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் கீழ் 8 பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களங்கள் உள்ளபோதும் ஆளணிப் பற்றாக்குறைகள் உள்ள யாழ்பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் சிறந்த தொழிலாற்றலால் வேலைகளைத் திருப்தியாக நிறைவேற்றி வருகிறது எனவும் தெரிவித்தார்.

எழுதுவினைஞர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் நூலகர்கள் ஆகிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் யாவும் விரைவில் நிரப்பப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் சொன்னார். (க-10)

# வெள்ளி இரவு ஊரடங்கை தளர்த்துமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.12

புதுவருடப் பிறப்பன்று பொது மக்கள் ஆலய வழிபாட்டில் பங்குபற்ற வசதியாக நாளை வெள்ளிக்கிழமை இரவு வலி.மேற்குப் பகுதியில் ஊரடங்கைத் தளர்த்த வேண்டுமென்று வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோக நாதன் 513 ஆவது படையணித் தளபதியிடம் கேட்டுள்ளார்.

புதுவருடம் இரவு 9.00 மணிக்குப் பிறப்பதால் அந்த நேரத்தில் ஆலயங்களில் விஷேட பூசைகள் இடம்பெறவிருக்கின்றன. அதில் பக்தர்கள் பங்குபற்ற வசதியாகவே ஊரடங்கு தளர்த்தப்படவேண்டும் என்று அவர் தளபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை -

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் புத்தாண்டை ஒட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக பக்தர்கள் அங்கு செல்ல படை அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர் என்று திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ-3)

# இயேசுவின் அடிச்சுவட்டில் எம் காலடிகளைப் பதிப்போம்

மனுக்குலத்தை மீட்க மனித அவதாரம் எடுத்த நம் ஆண்டவர் இயேசு தாம் பாடுபடுவதற்கு முன் சீடருடன் கூடி இறுதி இராவுணவை உட்கொண்ட நன்னாள் இது. புதிய மோசே இயேசு தம் பாஸ்கா பலிக்கு ஆழ்ந்த அர்த்தங்களைக் கொடுத்த புனித நாள் இது.

**தவக்காலச் சிந்தனை**

இஸ்ராயேல் மக்களின் வாழ்வில் மறக்க முடியாத நாள் ஒன்று உண்டு என்றால் அது இந்த நாள்தான். எகிப்தில் அடிமைகளாய் இருந்த அவர்களை கடவுள் தாமே தம் வல்லமையான கரத்தால் மீட்டு வாழ்வைக் கொடுத்த மாபெரும் நிகழ்ச்சியை அந்த மக்கள், ஆண்டுதோறும் நன்றிப் பெருக்குடன் கொண்டாடி மகிழ்ந்தார்கள். இயேசுவும் யூதப் பாரம்பரியப்படி ஆண்டுதோறும் பாஸ்காப் பலியைக் கொண்டாடினார். ஆனால் இன்று நாம் நினைவுகூரும் இயேசுவின் இறுதி இராவுணவு மிகவும் தனிச் சிறப்பு வாய்ந்தது.

**44 ஆம் நாள்**

ஏனெனில் இன்றுதான் 'இதோ உலகம் முடியும்வரை எந்நாளும் உங்களோடு இருககின்றேன்' என்றுரைத்த ஆண்டவர் தன்னையே பிரசன்னப்படுத்தும் நற்கருணையை ஏற்படுத்தினார். பணிவிடை பெறுவதற்கு அல்ல பணிவிடை புரியவே வந்தேன் என்று கூறியது அலங்கார வார்த்தைகளுக்காக அல்ல. மாறாக தம் முன்மாதிரியான செயலையும் 'நான் உங்களுக்கு அன்பு செய்ததுபோல் நீங்களும் ஒருவருக்கொருவர் அன்பு செய்யவேண்டும்' என்றுரைத்த அன்புக் கட்டளையையும் விட்டுச்செல்கிறார்.

**இன்று பெரிய வியாழன்**

தன்னை மறந்து மற்றவர்களின் வாழ்வுக்கு ஒளியூட்ட வந்த செம்மறியின் இதயத்திற்கு நாம் கொடுக்கும் பதில் என்ன? பயனை எதிர்பார்க்காமல் பணிசெய்ய நாம் ஆயத்தமா? வேறுபாடின்றி எல்லோருக்கும் பாசக் கயிற்றை நீட்ட நாம் ஆயத்தமா? இந்த நல்லெண்ணங்கள் எம் மனங்களில் பதியப்பட இயேசுவின் அடிச்சுவட்டில் எம் காலடிகளை உறுதியோடும், ஆன்ம வாஞ்சையோடும் பதிப்போம்.

வண.பிதா.A.அமலதாஸ்.



தலையால் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை தனித்தனியாகப் பிரிக்க சிங்கப்பூரில் நடைபெற்ற சந்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. கடந்த ஆண்டு நேபாள மருத்துவ மனையில் தலையால் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் மருத்துவக் கண்காணிப்பில் இருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

(விவரமான செய்தி 9ஆம் பக்கத்தில்)

# புத்தாண்டுக்கு முன் வழங்கவிருந்த நிவாரண விநியோகத்தில் தாமதம்

இடம்பெயர்ந்த மக்களுக்கான மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

பிரதேச செயலகங்களால் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் பெற்றுக்கொள்வதற்கான 'பெர்மிட்'டுகள் வழங்கப்பட்டபோதிலும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பருப்பு, பால்மா ஆகியவை கிடைக்காததால் பொருள்களை விநியோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னர் நிவாரணப் பொருள்கள் வழங்க நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் பருப்பு, பால்மா என்பன கிளைக கடைகளுக்கு வழங்காததால் விநியோகம் தடைப்பட்டுள்ளது. (க-117)

## கூட்டம்

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கான விசேட பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு மாணவர் மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (க-6)

## புலிகளின் நடவடிக்கைகளுக்குப் பாராட்டு

# அரசாங்கமும் சிலரை விடுவித்து நல்லெண்ணத்தைக் காட்டவேண்டும்

## சமாதானத்துக்கான பெற்றோர் இயக்கம் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.12

விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் நல்லெண்ண அடிப்படையில் தங்களது பிடியிலுள்ள பாதுகாப்புப் படையினரை விடுதலை செய்துவருவது போல் அரசாங்கமும் தனது தடுப்புக் காவலிலுள்ள புலிகள் இயக்கச் சந்தேக நபர்கள் சிலரை விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சமாதானத்துக்கான பெற்றோர்கள் இயக்கம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி இன்னும் ஒரு மாத காலத்திற்குள் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக மறியல் போராட்டம் ஒன்றை நடத்துவதற்கும் ஒழுங்கு செய்து வருவதாக அந்த இயக்கத்தின் தலைவர் கட்டன் ஜானக தேனுவர நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

சித்திரைப் புத்தாண்டு முடிவுற்றதும் தமது இயக்கத்தின் நிறைவேற்றுக் குழுவைக் கூட்டி இம்மறியல் போராட்டத்தை நடத்தும் தினத்தைத தீர்மானிக்கவிருப்பதாக அவர் கூறினார்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தின்போது காணாமற்போன பாதுகாப்புப் படையினரின் பெற்றோர்கள் மற்றும் அவர்களது உறவினர்கள், சமாதானத்தை விரும்புபவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையினோர் இம்மறியல் போராட்டத்தில் கலந்துகொள்ள உள்ளார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்தினர் தங்கள் பிடியிலுள்ள பாதுகாப்புப படைவீரர்களையும், சிவிலியன்களையும் நல்லெண்ண அடிப்படையில் விடுவித்து வருகின்றனர். யுத்தம் தொடரும்போது அவர்களது இந்நடவடிக்கை இடம்பெற்று வருவது பாராட்டத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# மானிப்பாயில் தொடரும் திருட்டுகள்

சண்டிலிப்பாய்,ஏப்.12

மானிப்பாய், சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் வீடுகளிலுள்ள ஆடுகள், கோழிகள் ஆகியன திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

சில தினங்களுக்கு முன்னர் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்குச் சமீபமாகவுள்ள ஒரு வீட்டில் மறி ஆடு ஒன்றும் 12 கோழிகளும் இரவு நேரத்தில் திருட்டுப் போயுள்ளன. மானிப்பாய் - சுதுமலை சந்திக்குச் சமீபமாகவுள்ள வீடொன்றில் கூட்டில் விடப்பட்டிருந்த கோழிகளும் திருடப்பட்டுள்ளன.

இதேவேளை - கடந்த வாரம் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீடு ஒன்றில் இரு ஆடுகள் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளன. (க-135)

# சாயி சிந்தனை



ஓ மனிதா! நீ மனைவிக்காக அழுகிறாய், கணவனுக்காக அழுகிறாய், பணத்துக்காக, பதவிக்காக அழுகிறாய், பேருக்கும், புகழுக்கும் அழுகிறாய், நீ இறைவனுக்காக கண்ணீர் விட்டதுண்டா? இல்லை உலகத்துக்காக அழுவதுபோல் இறைவனுக்காக அழுவதால் அவரைக் கட்டாயம் காணலாம்.

ஆன்மீகத்திலும் கடவுள் பற்றியும் பகுதி நேர பக்தனாக இருக்கிறாய். உலக விவகாரத்துக்கு எதையும் தியாகம் செய்தவனாக இருக்கிறாய். நீ வீடு வாசல்

## கெட்ட எண்ணங்களை விலக்கு

துறந்து காட்டுக்குச் செல்வதல்ல. மனத்துக்கு உள்ள கெட்ட எண்ணங்களை விள்க்குவதே யோகம். தம்மிடமுள்ள கெட்ட உணர்வுகளையோ எண்ணங்களையோ விலக்க வேண்டும். அதுவே உண்மையான தியாகம்.

(ப்ரசாந்தியில் அமிர்தவாஷினி - பாகம்-5)



மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வளவில் வர்த்தக சங்கத்தினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர் பூங்கா திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட சட்டத்தரணியும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற புதில் நீதிபதியுமான மு.சபாநாதன் உரையாற்றுகிறார்.

அருகில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அமர்ந்திருக்கிறார். வலி.வடக்குப் பிரதேசசபைத் தலைவரும், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரனும் படத்தில் காணப்படுகிறார். (ம-86)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

51, சென். ஆன்ஸ் லேன், சுண்டுக்குளியைச் சேர்ந்த முத்துக்குமாரசாமி என்பவருடைய விசேட அ.அ. சிறுதொகைப் பணம், திறப்புக் கோர்வை என்பன நேற்று மனோகரா திரையரங்கின் முன்னால் உள்ள சாந்தையர் மடம் பிள்ளையார் கோயிலில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதிக்கிளையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (86524)

7ஆம் வட்டாரம், மண்டைதீவைச் சேர்ந்த செல்வி தயாநிதி தம்பிஐயா என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.686910326V), விசேட அ.அட்டை, கல்வித் திணைக்கள ஜொப் காட், பல்கலைக்கழக அ.அட்டை, டிப்ளோமா அ.அட்டை என்பன யாழ். பெரிய கடை வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆஸ்பத்திரி வீதி, வசந்தா பார்மஸியில் ஒப்படைத்து உதவவும். (86535)

கைச் சங்கிலி ஒன்று, 09-04-2001 அன்று காட்டுக்கந்தோர், 120, கண்டி வீதிக்கு இடையிலும் காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் இருந்து பேரின்பநாயகம் ஒழுங்கை ஊடாகவும் கச்சேரி நல்லூர் வீதிக்கிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் S.சண்முகரட்ணம், 42, காட்டுக்கந்தோர் ஒழுங்கை எனும் முகவரியில் கொடுத்து உதவவும. சன்மானம் வழங்கப்படும். (C/16243)

திருமதி தம்பிராசா பரிபூரணம் என்பவரது தேசிய அ.அட்டை (385320175V), விசேட அ.அட்டை எனபன 06-04-2001 வெள்ளிக்கிழமை தாவடி கீதா அம்மன் கோயிலுக்கும் உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்மன் கோயிலுக்கும இடையில் பேர் சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து அம்மன் வீதி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (86550)

## விற்பனைக்கு

ஆலயப் பாவனைக்கு உகந்த (இந்தியத் தயாரிப்பான) புதிய பெரிய கோண் ஸ்பீக்கர்கள், (ஆறு சோடி) மின் இயந்திரம் பொருத்தக் கூடிய வண்டில்(சிறு திருத்தங்கள் செய்ய வேண்டியதும்) விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- மயூரன், ஆடிய பாதம் வீதி, கொக்குவில் மேற்கு. (86479)

## வீடு விற்பனைக்கு

**ICRC** தலைமைச் செயலகத்துக்கு அருகில் 126/4, **Temple Road** இல் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. சுற்றுமதில், கிணறு உட்பட அனைத்து வசதிகளும் உண்டு. மேற்படி முகவரியில் தொடர்பு கொள்க. (86481)

## புதிய புத்தகங்கள்

அம்பிகைபாகனின் ஆண்டு 5 புலமைப்பரிசில் 2001-2002 இற்கான முற்றிலும் புதிய பதிப்பு, ரமணனின் கம்பியூட்டர் நூல்கள், கேசவனின் அளவையியல், மெய்யியல் புத்தகங்கள், வண்ணமிகு வாழ்த்துமடல்கள் விற்பனையாகின்றன. பரணன்,138, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி *2365.* (86470)

## விற்பனைக்கு அல்லது வாடகைக்கு

யாழ்ப்பாணம் நீதிமன்றம் அல்லது நல்லூர் - கந்தசாமி கோயிலடி சுற்றாடலில் இரு அறைகளுடன் கூடிய வீடு வாங்குவதற்கு அல்லது வாடகைக்குத் தேவை. தொடர்பு:- 155, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (86471)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். மற்றும் லவ்பேட்ஸ் (மஞ்சள், வெள்ளை, பச்சை, நீலம்) விற்பனைக்கு உண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். (கண்ணா வீடியோ சென்ரர் ளவு)

(86507)

## தவறிவிட்டது

239, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பத்மநாதன் விக்னேஸ்வரி என்பவரின் தேசிய அ.அ. (இல. 546123251V), விசேட அ.அட்டை என பன கடந்த 26-03-2001இல் யாழ். போதனா வைத்தியசாலைக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து 18, மூத்த விநாயகர் வீதி, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (86555)

## சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள்

8 நாள்கள் வளர்ச்சி அடைந்த **SAMEERA** இன சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. விலை **80/=** மட்டும். புறொயிலர் குஞ்சுகள் (16-04-2001) **55/=** விலையில் விநியோகிக்கப்படும். தொடர்பு:- வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, அத்தியடி அல்லது "கிளினசொட்" பின்புறம், மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (86542)

## விற்பனைக்கு உண்டு

5**kW** லிஸ்ரர் இன்ஜின், 4**kW** லிஸ்ரர் இன்ஜின், **LEUMS - U.P.S. - POWER** விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். திரு.சாருஜன் **K.K.S. Road, Kokuvil. T.P. 2961.** (86541)

ஊர்ச்சேவல்கள் விற்பனைக்குண்டு. தினமும் காலை 6 மணி முதல் 8 மணி வரை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- **7/1**, உடையார் லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (86538)

**NATIONAL(DOUBLE DOOR), SINGER, REFRIGERATOR** கள் விற்பனைக்கு உண்டு. **SAIRAM,** 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (86468)

ஈரோஸ்டார் டிஸ் 6 அடி அமெரிக்கா **(EUROSTAR DIS U.S.A.)** விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 213, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். **T.P.** 2863 (86544)

## T.V.விற்பனைக்கு

12" கறுப்பு வெள்ளை **A/C, D/C** 20" கலர் **(NATIONAL)** விற்பனைக்குண்டு. **N.T.**ராஜன், 140, **K.K.S.** வீதி, சத்திரத்துச் சந்தி, யாழ்ப்பாணம். (86545)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

ஆடுபாவத்தை, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த வைத்திய குடும்பத்துக்கு வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். முழு விவரத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதமூலமாகவோ தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு: Dr. ராஜன், மே/பா சுந்தரலிங்கம், வதிரி, கரவெட்டி. (86306)

## மணமகள் தேவை

யாழ்.இந்து குடும்பத்தைச் சேர்ந்த, (33) விவாகரத்துப் பெற்ற, செவ்வாய்க குற்றமற்ற, ஆயிலிய நட்சத்திர, தனியார் வைத்தியராக, சொந்த வைத்திய நிலையம் வைத்து நடத்துபவருக்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த, படித்த, அழகான, பண்பான பெண்ணை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்புகளுக்கு: விள.இல.1254, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (86305)

## பணிப்பெண் தேவை

நல்லூர்ப் பகுதியில் உள்ள சிறிய குடும்பம் ஒன்றுக்கு பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். விள.இல.1257, மே/பா. உதயன்.

(C/16263)

## நாவலர் சனசமூக நிலையம்

பறாளாய், சுழிபுரம்.

புதிய கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு

மாவட்ட மட்டத்தில் நடத்தும் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோருதல்

**மரதன்ஓட்டம் (ஆண்கள்) -**

13.04.2001 வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

பதிவுக்கட்டணம்: ரூபா 25.00

**மென்பந்துப் போட்டி-** 6 பேர், 5 பந்துப் பரிமாற்றம்
**கரப்பந்துப் போட்டி -** செற் அப் முறை
(15.04.2001 ஞாயிறு பிற்பகல் 2.00 மணிக்கு நிலையத்தில் போட்டி ஒழுங்கு தெரிவு) பதிவுக்கட்டணம் ரூபா 50/-

-ஸ்கைலாக் ஏஜென்சியில் (சுழிபுரம்) பதிவு செய்யவும்.

அணிப் பிரதிநிதிகள் சமூகம் தரவும்.

**பொதுஅறிவுப் போட்டி-**

பலரது விருப்பத்திற்கமைய

*முடிவுதிகதி 30.04.2001* வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நிலையத்துடன் தொடர்பு கொண்டு வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளவும்.

நிலையத் திறப்பு விழா நிதிக்காக யாழ்நகரின் பிரபல்ய இசைக்கலைஞர்கள் இணைந்து வழங்கும்

**சாரங்கா இசைக்குழுவின் "தேனிசை மழை"**

இடம் :-யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

காலம் :-14.04.2001 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு

ரிக்கெட்டுகள் மண்டப வாயிலில்

(86557) - நிர்வாகம்.

## பாவனையாளர்களே!

*லாலா சோப் ஸ்தாபனத்தாரின் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்*

| | |
|---|---|
| *முதலாம் பரிசு இல.* | 1311 - 2 பவுண் |
| *இரண்டாம் பரிசு இல.* | 1034 - 1 பவுண் |
| *மூன்றாம் பரிசு இல.* | 2340 - 1/2 பவுண் |

*ஆறுதல் பரிசு இலக்கங்கள்:*

1000 ரூபா பெறுமதியான 06 சாறிகள்

1) 302 4) 3971
2) 5647 5) 4674
3) 6689 6) 1227

இன்னும் 3 பரிசுகளுக்குரியவர்கள் வந்து சேரவில்லை; அவர்களை எதிர்பார்க்கின்றோம்.

நான்காம் மாதத்திற்கான எமது அடுத்த அதிர்ஷ்டலாபச் சீட்டு (ரிக்கெற்) *விற்பனைக்கு வந்து விட்டது!*

**லாலா சோப் தொழிற்சாலை, அச்சுவேலி.**

(C/16244)

## விற்பனைக்கு

- **Eurostar Digital Receiver - 9700F.**
- **SAMSUNG VORTEC Digital Receiver.**
- **Eurostar Digital + Analog + ci Receiver.**
- **PANSAT Digital Receiver (U.S.A.)**
- **Eurostar 950 Analog Receiver.**
- **ALFA GOLD LT - 730 Analog Receiver.**
- **LNBF.**
- **SONY** கலர் **T.V** கள் **(L3, & Qw3)**

மற்றும்

*பல்வேறு வகையான **Plastic** கதிரைகள், ரேடியோக்கள், அன்ரனாக்கள் விற்பனைக்குண்டு.*

**அருண் வீடியோ மூவி**

**Tel**- 070-212801 நெல்லியடி.

(86534)

பப்படத் தயாரிப்பில் வடமாகாணத்தில் மிகச் சிறந்த முறையில் சுவையாகவும், சுகாதார முறைப்படியும் கலப்படம் எதுவும் இல்லாமல் நீண்ட காலமாக நல்ல தரமான ஒரு தனி இடத்தைப் பிடித்த பப்படம் தான்

**ஆஞ்சநேயர் பப்படம்**

*கைதேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்ட இவற்றைச் சந்தைப்படுத்த எமது ஏக விநியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருப்பவர்கள்*

**"லாலா" சோப் ஸ்தாபனத்தார், அச்சுவேலி.**

(சி16247)

## யாழ் வாழ் மக்களுக்கு!

மலரும் புத்தாண்டு நிறைவான மகிழ்ச்சியையும் நிலையான சமாதானத்தையும் வழங்கப் பிரார்த்தித்து நிற்கும் மக்கள் மனமறிந்த

**மக்கள் வங்கியின்**

கிளைகள் அனைத்தும் புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக எதிர்வரும் 14.04.2001 சனிக்கிழமை காலை 8.30 மணியில் இருந்து நண்பகல் 12.00 மணிவரை திறந்திருந்து அன்புக்கரம் நீட்டி உங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கும்!

உள்நாட்டு வெளிநாட்டு நாணயக் கணக்குகளை திறத்தல் உட்பட சகல கணக்குகளுக்கும் வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி

**மக்கள் வங்கி**

(சி16260)

## 90 மணித்தியால சத்திர சிகிச்சை மூலம்
# தலைகள் ஒட்டியபடி பிறந்த குழந்தைகளைப் பிரிப்பதில் வெற்றி!
## சிங்கப்பூர் மருத்துவ நிபுணர்கள் சாதனை

சிங்கப்பூர் சிற்றி ஏப். 12

தலையால் ஒட்டிப் பிறந்த இரட்டைப் பெண் குழந்தைகளை தனித்தனியாகப் பிரிக்க 90 மணித்தியாலங்கள் தொடர்ந்த சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்ததாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு நேபாளத்தில் பிறந்த இரட்டைக் குழந்தைகளுக்கு மண்டையோடுகள் இணைந்திருந்தன. கங்கா, யமுனா என்று பெயரிடப்பட்ட இந்த இரட்டைக் குழந்தைகளை, சத்திர சிகிச்சை மூலம் தனித்தனியாகப் பிரிக்கும் கடினமான முயற்சியை மேற்கொள்ள சிங்கப்பூர் மருத்துவ நிபுணர்கள் முன்வந்தனர்.

இதனை அடுத்து 11 மாதக்குழந்தைகளான கங்காவும், யமுனாவும் சிங்கப்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். சிங்கப்பூர் மருத்துவ மனையில் மருத்துவ நிபுணர் கெத்கோ தலைமையிலான குழுவினர் குழந்தைகளின் மண்டையோட்டை வெட்டி, மூளைகளை தனித்தனியே பிரித்து 'பிளாஸ்டிக்' சிகிச்சை மூலம் வெவ்வேறு உருவமாக வடிவமைக்கும் மிகக்கடினமான சத்திர சிகிச்சையை மேற்கொண்டனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட சத்திர சிகிச்சை,90 மணித்தியாலங்கள் தொடர்ந்து நடைபெற்று, நேற்று முன்தினம் வெற்றிகரமாக முடிவடைந்தது.

38 மணித்தியாலங்கள் சத்திரசிகிச்சை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டதாகவும், இரண்டு மூளைகளுக்கும் நரம்பு நார்கள், குருதிக்குழாய்கள் போன்றவற்றை அவதானமாக வெவ்வேறாகப் பிரித்து அமைப்பதற்கு அதிக நேரம் எடுத்ததாகவும் நரம்பியல் நிபுணர் கெத்கோ தெரிவித்தார்.

தற்போது கங்காவும், யமுனாவும் நலமாக இருப்பதாகத் தெரிவித்த மருத்துவர்கள், எல்லோரையும் போல அவர்களிருவராலும் சாதாரண வாழ்க்கையை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்துள்ளனர்.

உலகில் இடம்பெறும் 20 லட்சம் பிரசவங்களில் ஒன்று மட்டுமே தலை ஒட்டியபடி இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் வாய்ப்புள்ளதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

(ஒ 6)

# போரில் சிறுவரின் பங்களிப்பு; ஜோர்டான் மாநாட்டில் கவலை

அமான். ஏப் 12

மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் யுத்த நடவடிக்கைகளில் சிறுவர்களை ஈடுபடுத்துவதற்கு ஜோர்டானில் சமீபத்தில் நடைபெற்ற சிறுவர்களின் நலன்களைப் பேணுவது தொடர்பான மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயது வந்தவர்களிடையேயான மோதல்களின்போது சிறுவர்கள் ஈடுபடுத்தப்படாமலிருப்பதை உறுதி செய்வது அனைவரதும் கடமை என்று மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

18 வயதிற்குக் குறைந்தவர்களைப் போரில் ஈடுபடுத்துவது குற்றமாகும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

அல்ஜீரியா, எகிப்து, ஈரான், ஈராக், சூடான், துருக்கி மற்றும் ஏமன் ஆகிய நாடுகளில் இராணுவ அமைப்புகளிலும் சிறுவர்கள் சேவையாற்றுவதாகவும் — இவர்களில் பலர் 10 வயதிற்கும் குறைவானவர்கள் என்றும் மாநாட்டில் கூறப்பட்டது.

(ஒ-9)

## நைஜீரியாவில் தொற்று நோயால் 200 சிறுவர் பலி!

கசாசே, ஏப். 12

நைஜீரியாவின் வட பகுதியில் உள்ள கானோ நகரில் தொற்று நோய்கள் காரணமாக கடந்த இருவாரங்களில் 200க்கும் மேற்பட்ட சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

அம்மை நோய் மற்றும் மூளைத்தண்டில் ஏற்படும் வைரஸ் தொற்று ஆகிய நோய்கள் பரவிவருவதால் சர்வதேச மருத்துவக் குழுவினர் தொற்று நோய்ப் பிரதேசமாக அப்பகுதியைப் பிரகடனப்படுத்தியுள்ளனர்.

(ஒ)

## சமய சர்வாதிகார நாடாக பாகிஸ்தானை மாற்ற முயற்சி
## பெனாஸிர் குற்றச்சாட்டு

லண்டன், ஏப். 12

பாகிஸ்தானின் அடிப்படை மதவாதிகள், இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப்பை பயன்படுத்திக் கொண்டு, பாகிஸ்தானை ஒரு சமய சர்வாதிகார நாடாக மாற்ற முயற்சிப்பதாக, முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சி போன்ற ஒன்றை அமைப்பதே அவர்களது நோக்கம் என்றும் பெனாஸிர் குறிப்பிட்டார். [ஒ]

## மரண அறிவித்தல்கள்
### வெள்ளையர் இராசையா

கோட்டைக்காடு, மல்லாகத்தைச் சேர்ந்த வெள்ளையர் இராசையா கடந்த (10- 4- 2001 செவ்வாய்க்கிழமை இரவு காலமாகி விட்டார்.

அன்னார் வெள்ளையர் -குட்டி ஆகியோரின் அன்பு மகனும், மாணிக்கம்- வள்ளி ஆகியோரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரி, உதயமனோகரன், சாரதா, திருஞானவதி, புஷ்பலதா, விஜயகுமார், சுஜாதா, சசிகுமார், கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குணலிங்கம், செல்வராஜா, பாஸ்கரன், சாந்தலிங்கம், முருகமூர்த்தி, சாந்தகுமாரி, இராஜேஸ்வரி, திலகா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள்இன்று (12-4-2001) வியாழக்கிழமை பிற்பகல் 2. 00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. குணலிங்கம்,
(மருமகன்)
மனைவி, பிள்ளைகள்.

கோட்டைக்காடு,
மல்லாகம். (86558)

### சின்னையா நித்தியானந்தன்

புலோலி தெற்கு, நறுவிலியடியைச் சேர்ந்தவரும், யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3 ஆம் வருட பௌதிகவியல் சிறப்புப் பிரிவு மாணவனுமாகிய சின்னையா நித்தியானந்தன் கடந்த (10-4-2001) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் சின்னையா - பார்வதிப்பிள்ளையின் அன்பு மகனும், சச்சிதானந்தம் (சவூதி அரேபியா), மகேந்திரராஜா (பொறியியலாளர், லங்கா சிமெந்து), சத்தியதேவி(யா/ பருத்தித்துறை சென்.தோமஸ் றோ. க.த.க. பாடசாலை), சிவானந்தம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி ச. புவனேஸ்வரி, திருமதி ம. றஞ்சினிதேவி (ஆசிரியை, அராலி சரஸ்வதி வித்தியாலயம்), ரவிகரன் (அம்பிகா புத்தகசாலை, பருத்தித்துறை), சி. சாந்தினி ஆகியோரின் மைத்துனரும், மதிவதனன், ஜயஜீவன், யாழினி, கோமகன், சிரஞ்சீவி, தர்ஷினி ஆகியோரின் சிறிய தந்தையும், சஞ்சஜனின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரிகைகள் நேற்று (11-4-2001) புதன்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. ரவிகரன்
(மைத்துனர்)

நறுவிலியடி,
புலோலி தெற்கு, புலோலி. (சி/16271)

## உளவுவிமான மோதல் விவகாரம்
# அமெரிக்காவின் மன்னிப்பிலேயே 24 பேரின் தலைவிதி தங்கியுள்ளது
## சீன அரசு மீண்டும் வலியுறுத்து

பெய்ஜிங், ஏப். 12

அமெரிக்க உளவு விமானத்தின் 24 கடற்படை அதிகாரிகளின் தலைவிதியும், அமெரிக்க, சீன உறவுகளும், அமெரிக்கா மன்னிப்புக் கோரும் வார்த்தையிலேயே தங்கி உள்ளதாக சீனா தெரிவித்துள்ளது.

சீன வான் பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்த அமெரிக்க உளவு விமானம், சீனவிமானத்துடன் மோதி அதன் விமானி இறக்கக் காரணமாக இருந்ததற்கு அமெரிக்கா பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் —

அவ்வாறு மன்னிப்புக்கோரினால் மட்டுமே இந்த விவகாரத்திற்கு சுமுகமாகத் தீர்வு காண முடியும் என்றும் —

சீன அரசுவலியுறுத்தியுள்ளதாக சீனச் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சீன விமானியின் உயிரிழப்புக்கு அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் வருத்தம்தெரிவித்து அறிக்கை வெளியிட்டிருந்தார். எனினும் பவல் சரியான முறையில் வருத்தம் தெரிவிக்கவில்லை என்றும் அது, சீன மக்களுக்கோ, தனியான சீன விமானிக்கோ தெரிவிக்கப்படவில்லை என்றும் சீனா கூறியுள்ளது.

தென் சீனக் கடற்பிரதேசத்தில் சீனப் போர் விமானத்துடன் அமெரிக்க உளவு விமானம் மோதியதை அடுத்து, சீனாவின் தைலான் தீவில் அந்த விமானம் தரையிறங்க நேர்ந்தது.

இந்த விபத்தில் சீனப்போர் விமான விமானி இறந்தார். அமெரிக்க உளவு விமானம், அதிலிருந்த 24 பணியாளருடன் சீன அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

(ஒ 9)

## பலஸ்தீன நகருக்குள் சென்ற அரபுச் செய்தியாளர் மாயம்

காஸா, ஏப். 12

மேற்குக்கரையின் பலஸ்தீனப் பகுதியில் செய்தி சேகரிக்கச் சென்ற இஸ்ரேலிய அரபு இனத்தைச் சேர்ந்த செய்தியாளர் காணாமல் போயுள்ளார். அவர் தாக்குதல்களில் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக இஸ்ரேலியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

யூசும் சமீல் என்ற 63 வயதான செய்தியாளரே காணாமல் போனவராவார்.

கடந்த வாரம் பலஸ்தீனக் கட்டுப்பாட்டு நகரான பீட்சாலாவுக்குள் செய்தி சேகரிக்கச் சென்ற சமீல் மீண்டும் திரும்பி வரவில்லை என்று அவர் பணியாற்றும் செய்தி நிறுவனம் முறையிட்டுள்ளது.

இதேவேளை, சமீலைப் பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென்று பலஸ்தீனத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

(ஒ-9)

## தலிபானின் கட்டுப்பாட்டிலில்லாத
# ஆப்கானிஸ்தான் பிரதேசத்தில் விலங்குத் தீவனமே மக்கள் உணவு!

இஸ்லாமாபாத், ஏப். 12

ஆப்கானிஸ்தானில் ஆளும் தலிபான்களுக்கு எதிரான குழுவினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் வாழும் மக்கள் உணவுப் பற்றாக்குறையால் கால்நடைத் தீவனங்களை உண்கின்றனர்.

ஆப்கானிஸ்தான் நிவாரணப் பணிகளுக்கான ஐ. நா. ஒருங்கிணைப்பாளர் இஸ்லாமாபாத்தில் வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு நிலவும் வரட்சி மற்றும் போர் காரணமாக மிக மோசமான அளவில் உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் கிடைக்கக்கூடிய உணவுப் பொருள்களுடன் விலங்குகள் உண்ணும் உணவு வகைகளையும் அப்பகுதி மக்கள் உட்கொள்கிறார்கள்.

விலங்கு உணவுகளில் கலந்துள்ள ஒருவித இரசாயன கலவை பாரிசவாத நோயை ஏற்படுத்தி வருகிறது.

படாக்ஸான் மாகாணமே உணவுப் பற்றாக் குறையால் மிக அதிகமான பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு ஐ நா. ஒருங்கிணைப்பாளர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் பெரும் பகுதி ஆளும் தலிபான்கள் வசம் உள்ளது. படாக்ஸான் மாகாணம் மட்டும் அஹ்மத்ஷா மசூத் என்பவரின் தலைமையிலான எதிரணியினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. தலிபான்களுக்கும் எதிரணியினருக்கும் இடையே தொடர்ந்து மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

## மணிப்பூரில் நிலநடுக்கம்

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தின் சில பகுதிகளில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரிச்டர் அளவு கோலில் 5. 2 எனப் பதிவாகிய இந்த நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடித் தகவல்கள் ஏதுமில்லை. (ஒ)

# மரண அறிவித்தல்கள்

## நீக்கலஸ் ஆசீர்வாதம்

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கு, மடத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட நீக்கலஸ் ஆசீர்வாதம் நேற்று (11-04-2001) புதன்கிழமை மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் சுந்தரத்தின் மருமகனும் நேசம்மாவின் அன்புக் கணவரும் அன்ரன் உதயகுமார், ஜெயக்குமார் [ஜேர்மனி], விஜயகுமார் [லண்டன்], ரவிக்குமார் [சுவிஸ்], சசிகலா, உதயகலா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற மரியதாஸ், எட்வின், யாமா, ரமேஷினி, சகாயராணி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சுரேகா, ஜென்சி, நிரோயன், கஜார், டனிஸ்ரன், [மோகிதா, சந்தோஷ், டனுகா, டொனால்ட், டினோ ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-04-2001) வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணியளவில் புனித மிக்கேல் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக உரும்பிராய் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்ரன் உதயகுமார் (மகன்)
(அன்ரன்)

பலாலி வீதி,
உரும்பிராய் வடக்கு,
மடத்தடி.
(86573)

## செல்லத்துரை தவவிநாயகம்
(விதானையார்)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பிரான்ஸில் வசித்தவராகிய செல்லத்துரை தவவிநாயகம் (முன்னாள் விதானையார், முன்னாள் கிராம சபைத் தலைவர் — அல்லைப்பிட்டி, மண்கும்பான், முன்னாள் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் — அல்லைப்பிட்டி) அவர்கள் கடந்த (10 - 04 - 2001) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை — சொர்ணம்மா (உடையார் — அல்லைப்பிட்டி) ஆகியோரின் மூத்த மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் டெனியா சின்னப்பர் — நாரந்தனை ஆகியோரின் மூத்த மருமகனும், கிருஷ்ணாம்பாளின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் கிருபாலினி (சென்னை), சந்திரகுமார் (குமார் ஸ்தாபனம் — பிரான்ஸ்), சூரியகுமார் (பிரான்ஸ்), தவபாலினி (பிரான்ஸ்), ஜெயபாலினி (லண்டன்), குணபாலினி (பிரான்ஸ்), உருத்திரகுமார் (சென்னை), சத்தியபாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகேஸ்வரி (யாழ்ப்பாணம்), இந்திரசித்து (ராணி ஜுவல்லர்ஸ் — கொழும்பு), தவநாயகி, பரமேஸ்வரி, சிவநேசராசா, இரவீந்திரன், ஜெயசீலன், கஜவல்லி, சிவானந்தன் ஆகியோரின் மாமனாரும், தையல்நாயகி (சுதுமலை), காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை, சிவயோகலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற நடேஸ்வரி, நடேசபிள்ளை (அல்லைப்பிட்டி) ஆகியோரின் சகோதரரும், ஞானசம்பந்தர் (முன்னாள் விவாகப்பதிவாளர்—வலி. மேற்கு), இராசம்மா (கொழும்பு), காலஞ்சென்ற இரத்தினசபாபதி (முன்னாள் உப தபால் அதிபர் — அல்லைப்பிட்டி), சச்சிதானந்தம் (முன்னாள் உதவி ஆணையாளர்— யாழ்ப்பாணம்), மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற இராமநாதன், இரகுநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான கனகராஜா, துரை, நகுலாம்பாள், புவனாம்பாள், புஷ்கராம்பாள், ஜெகதாம்பாள் (குஞ்சு — இந்தியா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. நடேசபிள்ளை
(சகோதரன்)

130, இராசாவின் தோட்டம்,
நல்லூர்.
(86563)

## ஆரோக்கியநாதர் அருமைநாதர்
(றூபன்)

எழுவைதீவைச் சேர்ந்த ஆரோக்கியநாதர் அருமைநாதர் நேற்று (11-4-2001) புதன்கிழமையன்று காலமாகிவிட்டார்.

அன்னார் ஆரோக்கியநாதர் (அருள்), காலஞ்சென்ற மரியசிலி ஆகியோரின் அருமை மகனும் ஞானச்செல்வியின் (பபா) அன்புக் கணவரும் அருள் சீலியின் பாசமிகு தந்தையும் சூசைமுத்து - கிறிஸ்ரினம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் மாசில்லா இருதயநாயகியின் (செல்வதி) அன்பு மருமகனும், கரன்ராஜ்ஜின் அருமை மைத்துனரும் செல்வம், றோஸ்மலர், மல்லிகா, காலஞ்சென்ற சகாயமலர், அன்ரனிக் குரூஸ், தொம்மைப்பிள்ளை, அமலநாதன், யஸ்ரின் ஆகியோரின் அருமை மருமகனும் பேதுறுப்பிள்ளை, அமிர்தநாதர், அருமைநாயகம், அன்ரனி பெர்னாண்டோ, மேரி கொன்சி, மணி, சாந்தி ஆகியோரின் சிறிய மகனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-4-2001) வியாழக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் எழுவைதீவு புனித தோமையார் சேமக்காலைக்கு நலலடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சூ. ஆரோக்கியநாதர்
(அருள்) (தந்தை)

5 ஆம் வட்டாரம்,
எழுவைதீவு.
(86568)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 12
தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலய வருடாந்தமஹோற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். (ஒ)

* * *

சுதுமலை வடக்கு ஈஞ்சடி ஞானவைரவர் தேவஸ்தானத்தில் ஹோமசஹித இலட்சார்ச்சனை நாளை வெள்ளிக்கிழமை முதல் இடம்பெறவிருக்கின்றது.

தொடர்ந்து 12 தினங்கள் இலட்சார்ச்சனை இடம்பெற்று எதிர்வரும் 23 ஆம் திகதி சங்காபிஷேகம், பஞ்சமுக அர்ச்சனை, வீதியுலா ஆகியன நடைபெறவிருக்கின்றன. (ம-3)

* * *

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் ஸகஸ்ர மஹா சங்காபிஷேகம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும். இரவு விசேட உற்சவமும் முருகப்பெருமான் வீதிவலமும் நடைபெறும். (ம-11)

* * *

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பெரிய வியாழன் ஆராதனை இன்று மாலை 5.30 மணிக்கும் பெரிய வெள்ளி தினமான நாளை காலை 6.30 மணிக்கு சிலுவைப் பாதையும் மாலை 5.30 மணிக்கு ஆராதனைகளும் நடைபெறவிருக்கின்றன. (ம-51)

## யாழ். சேவையில் நாடகம்

யாழ்ப்பாணம், ஏப். 12
யாழ். மறை மாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக் குழுவின் ஆதரவில் இவ்றீசியன் சபை மாணவர்கள் வழங்கும் 'சமாதானத்தின் கருவிகளாய்' என்னும் நாடகம் எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சேவையில் ஒலிபரப்பப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம—3)

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு

தென்மராட்சி, ஏப். 12
10 வயதுச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகச் சந்தேகிக்கப்படும் 39 வயது நபர் ஒருவரை நெல்லியடிப் பொலீஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பொலிகண்டிப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பிரஸ்தாப சிறுமி மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ-3)

## தகவல் தரக் கோரிக்கை

விடுதலைப்புலிகளின் பெயரைக் கூறி மானிப்பாய், நவாலி, சங்கானை ஆகிய பகுதிகளில் பணம் பறிக்கும் செயலில் ஈடுபடுபவர்கள் குறித்துத் தமக்குத் தகவல் தரும்படி வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவர் என். திரிலோகநாதன் பொது மக்களைக் கேட்டுள்ளார்.

இத்தகைய சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும்—

மக்கள் தயக்கமின்றி இது விடயமாகத் தகவல் தந்தால் சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்ய உதவியாக இருக்கும் என்றும் — அவர் கேட்டுள்ளார். (ஐ—3)

# காணாமற் போய்விட்டன

இல. 34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகத்திலுள்ள ரட்ணா ஸ்ரோர்ஸில் கடந்த 06-04-2001 வெள்ளிக்கிழமையன்று அதிகாலை நேரம் எனது தேசிய அடையாள அட்டை (இல: 560401965V), விசேட அடையாள அட்டை, தொழில் அடையாள அட்டை (10884), பணம் 4650/- ரூபா என்பன மேசை லாச்சியிலிருந்து காணாமற்போய் விட்டன.

ரட்ணா ஸ்ரோர்ஸ் உரிமையாளரான கந்தையா இரத்தினசிங்கம் ஆகிய நான் வெளியில் சென்ற சமயம் இது நடந்துள்ளது. தகவல் அறிந்தவர் மேற்காணும் முகவரிக்கு அறியத் தரவும். சன்மானம் வழங்கப்படும்.

கந்தையா இரத்தினசிங்கம்
சுன்னாகம். (86560) உரிமையாளர்

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை தங்கம்மா

எழுதுமட்டுவாழ் தெற்கை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்போது உரும்பிராய் மேற்கில் வசித்து வந்தவரும் உசனைச் சேர்ந்த காலஞ்சென்ற சுவாமிநாதர் கந்தையா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியுமாகிய திருமதி பொன்னுத்துரை தங்கம்மா கடந்த 10-04-2001 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் சிவயோகநாயகி அம்மா (கொழும்பு), நவரத்தினராசா (கிராம உத்தியோகத்தர், எழுதுமட்டுவாழ்), பாலசுந்தரநாயகி அம்மா (கண்டாவளை), ஞானசுந்தரராசா (கனடா), அகிலாண்டநாயகி அம்மா (டென்மார்க்). சாந்தநாயகி அம்மா, காலஞ்சென்ற இராசநாயகிஅம்மா ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேந்திரம் (கொழும்பு), இந்திராணி (ஆசிரியை, நாவற்குழி மகாவித்தியாலயம், உரும்பிராய்), குமாரசாமி (கண்டாவளை), சுகேஜினி (கனடா), வைகுந்தவாசன் (டென்மார்க்), சிவரத்தினம் (எழுதுமட்டுவாழ்), மோகனக்குமார் (உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மாமியும் அண்ணாத்துரை, சோபனா (கொழும்பு), பிரதீபன் (நியூசிலாந்து), சுகன்யா (நோர்வே), சரண்யா, காலஞ்சென்ற நவீனன், மற்றும் ரமணன், பிரீதா (கண்டாவளை), அர்ச்சுணா ஏற்றியன் (கனடா), ஜனுசா, ஜசோன் (டென்மார்க்), துசாந்தி கோபிநாத், கோபிராஜ், சாருஜா, தாரகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-4-2001) வியாழக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. நவரத்தினராசா
(மகன் - கிராம உத்தியோகத்தர்)

தற்போதைய முகவரி:
மே/பா. அ. நல்லதம்பி,
மானிப்பாய் றோட்,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.
(86566)

## கதிரவேலு வேலாயுதம்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு வேலாயுதம் கடந்த (09 - 04 - 2001) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பார்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு—சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பு—பாக்கியம் ஆகியோரின் அன்பு மருமகனும், முத்தையா, பொன்னுச்சாமி காலஞ்சென்ற சரவணை மற்றும் நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலட்சுமி, கனகாம்பிகை, புவனேஸ்வரி, சிவகாமி, சற்குணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், தேசிங்குராஜா (ஜேர்மனி), தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், ச. சண்முகலிங்கம் (வர்த்தகர்), வானதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதிவண்ணன் (பிரான்ஸ்), மதீஸ்வரன் (பிரான்ஸ்), மதிவதனி, அருந்ததி (இந்து மகளிர் கல்லூரி. (A/L 2001 கலைப் பிரிவு மாணவி), மதிநேசன் (யாழ். இந்து மாணவன்) மற்றும் ஜேர்மனியில் வசிக்கும் கிஷோர்த்தனன், சியாம், தமிழினி ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான சபாபதி நாகமுத்து காலஞ்சென்ற இலங்கேஸ்வரன் மற்றும் தனலெட்சுமி (பிரான்ஸ்) தம்பதிகளின் அன்பு சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12 - 04 - 2001) வியாழக்கிழமை காலை 10. 00 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ச. சண்முகலிங்கம் (மருமகன்)
வே. தேசிங்குராஜா (மகன்)

315/2, 7ஆம் ஒழுங்கை,
பலாலி றோட், திருநெல்வேலி.
(86565)

# 41 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் மலர்வு
10 - 08 - 1936



மண்ணில் உதிர்வு
03 - 03 - 2001

## அமரர் முதலி பரமு

அங்கமெல்லாம் வாயாக அரற்றுகின்றோம் அவனியிலே
கல்லும் கசிந்துருகும் சொல்லால் அறிவூட்டி
காலம் தவறாது கருதி வளர்த்த ஐயாவே!
சீலம் மிகு சிரசிலோ சிதறும் தீ மூட்டினோம்
எங்கு சென்று புகுந்தனையோ?

பொங்கு தமிழ் பிறந்தோரெல்லாம்
தாங்குவது உலக இயற்கை, இல்லையென்ற
பாங்குடைய தத்துவத்தை உணர்த்திவிட்டுப்
பாதியிலே சென்றீர்கள் ஐயா!

கன்னமொழி எங்கே? காற்றோடு போனதுவோ?
என்ன குறை செய்தோம் உங்களை இழப்பதற்கு?

கண்களிலே நீருமில்லை; கதிகலங்கி நிற்கின்றோம்!
வாயார ஊர் புகழ வாழ்ந்தவரே!
வாழ்வோருக்குப் புத்தி சொல்லி வாழும் வழி காட்டியவரே!
எம்முடன் எப்பிறப்பில் ஒன்றாவீர்கள் காண்போமோ?
எங்குதான் சென்றீர்கள் எப்போது காண்போம் இனி?

எமது அன்புத் தெய்வத்தின் திடீர் மறைவைக் கேட்டு, எமது இல்லம் வந்து அவரது இறுதிக்கிரியைகளில் பங்குபற்றிய எம் உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்தோடு, இன்று (12.04.2001) வியாழக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை யிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தகவல்:*
நாகேந்திரம் (மகன்)
நிற்சாமம்,
சங்கானை.

(86570)

*பிரிவால் துயருறும்:*
**மனைவி, மக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

---

## BIT
## பரீட்சை முடிவுகள்

மேற்படி பரீட்சை முடிவுகளை 13.04.2001 முதல் பார்வையிடலாம்
பரீட்சை வினாக்களுக்கான விடைகள் 11.04.2001 முதல் வெளியாகி உள்ளன.

### Semester II
விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

இயக்குநர்
IIS,யாழ்ப்பாணம்.

(C/16285)

---

## அரியாலை
## 82ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா

காலம் : 14.04.2001 சனிக்கிழமை விஷு புதுவருடப்பிறப்பன்று
இடம் : யா/கனகரத்தினம் ம.ம.வித்தியாலயம்
*தலைமை :* திரு.ச.உருத்திரேஸ்வரன் அவர்கள்
*பிரதம விருந்தினர் :* திரு.S.T.பத்மநாதன் அவர்கள்

### நிகழ்ச்சி நிரல்

நண்பகல் 12.00 மணி
*அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தில் விசேட பூசை*
பிற்பகல் 2.00 மணி முதல்
*கரப்பந்தாட்டம்*
*வலைப்பந்தாட்டம்*
*பாலர் ஓட்டம்*
*பொதுக்கூட்டம்*
மாலை 5.30 மணிக்கு சகல நிகழ்ச்சிகளும் நிறைவுபெறும்.
அனைவரையும் விழாவில் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


பொ.நடராசா.
பொதுச்செயலாளர்,

(86547)

---

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு
01 - 03 - 1971



உதிர்வு
10 - 04 - 2001

## சின்னையா நித்தியானந்தன்

(விஞ்ஞான பீட மூன்றாம் வருட பௌதிகவியல் சிறப்புப்பிரிவு மாணவன்)

காற்றில் கலந்து வந்து காதில் விழுந்த மொழி
ஊற்றாய் மனதுள்ளே பெருந்துயரைப் பாய்ச்சியது!
ஓ..... நண்பா! உன் மரணம் மனதை நெருடுறதே!
தேடும் விழிகளுக்குள் வெறுமையே விழுகிறதே!
ஒன்றாய் விரிவுரைக்குச் சென்றதெல்லாம் மறையுமுன்னம்
நின்று போய் விட்டதுவோ உந்தன் உயிர்மூச்சு!
சென்ற இடமெல்லாம் சிறப்புறுவாய் என இருக்க
முன்னே விரைந்தாயோ விண்ணகத்தின் உயர்படிக்கு!

***இவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.***

மூன்றாம் வருட மாணவர்கள்,
விஞ்ஞான பீடம்.
யாழ்.பல்கலைக்கழகம். (86575)

---

## இலவச
## மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு

We Serve

**வடமராட்சி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் -**
*கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கரவெட்டி அரசினர் மருந்தகத்திலும்–*
*கடந்த வருடம் நவம்பரில் கரணவாய் நாமகள் சனசமூக நிலையத்திலும் –*

### எஸ்.எம்.பர்னாண்டோ

கண் பரிசோதனை நிலைய நிபுணர்களால் கண் பரிசோதனை செய்யப்பட்டவர்களில் மூக்குக் கண்ணாடி அணிய சிபார்சு செய்யப் பட்டவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படும்.

இடம் : நாமகள் சனசமூக நிலையம்,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி.
காலம்: 13.04.2001 வெள்ளிக்கிழமை மு.ப 9.30 மணி.
*அன்றைய தினம் முன்னதாகவே வருகைதந்து கண்ணாடிகளைப் பெற்றுச் செல்லுமாறு உரியவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.*

எம்.தர்மலிங்கம்,
செயலாளர்,
*வடமராட்சி லயன்ஸ் கழகம்.*

(C/16272)

---


## புதுவருடத்தை முன்னிட்டு
**நவீனரக புடைவை வகைகளை மலிவு விலையில் பெற்றிட நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்**

# வாணி ரெக்ஸ்

*தீப ஒளிவீச ஆடைகளின் சாம்ராஜ்யம் ஒன்று உங்களை வரவேற்கின்றது*
**தென்மராட்சியில் தனக்கென்றொரு தனி முத்திரையில் ஒளிர்ந்தவள் தற்போது யாழ் நகரில் உதயமாகியுள்ளாள்.**
இருளகன்று ஒளி பிறக்க ஒளிரும் ஆடைத் தெரிவுகளுக்கு

# வாணி ரெக்ஸ்



இல.81, பெரிய கடை, (C/16283) யாழ்ப்பாணம்.

## பாலியல்வல்லுறவுகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜனாதிபதியின் பணிப்புரைகள் புறக் கணிக்கப்பட்டு வருகின்றன. பெண்கள் விசாரணைக்குட்படுத்தப்படும்போது பெண் காவலர்கள் சமுகமளித்திருக்க வேண்டும். பாலியல் வல்லுறவு விசாரணைகள் வெகு தாமதமாகவே நடத்தப்படுகின்றன. 1999 ஜுலையில் நடைபெற்ற கமலிட்டா என்ற பெண் மீதான பாலியல் வல்லுறவுக் கொலை தொடர்பான வழக்கு விசாரணை போன்று பல விசாரணைகள் சாட்சிகள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் மிரட்டப்படுவதால் முடங்கிப்போய் உள்ளன. பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் ஆகியோர் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்பட வேண்டும். பாலியல் வல்லுறவுச் சம்பவங்களுடன் தொடர்புடைய படையினரை நீதியின் முன் நிறுத்த சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் - என்றும் அக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மன்னாரில் தமிழ்ப் பெண்கள் இருவர் அண்மையில் கொடூரமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் குறித்தும் மன்னிப்புச் சபையின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஜ-20)

## விசாரணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆளுநரின் பிரதிநிதி விசாரணைகளை இங்கு ஆரம்பித்துள்ளார்.

விசாரணைகளை நடத்துவதற்கென ஆளுநரால் நியமிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண சபையின தலைமைச் செயலகத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.நாகேஸ்வரன் நேற்றுப் பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

நேற்று மாலையே மாநகர சபைக்குச் சென்ற அவர் தனது விசாரணைகளை உடனடியாக ஆரம்பித்தார். அவரது விசாரணைகள் இன்றும் தொடரும் என்று தெரிவிக்கப்பட்டது.

விசாரணைகளின் முடிவில் அறிக்கை ஒன்றை அவர் மாகாண ஆளுநருக்கு சமர்ப்பிப்பார் (ம-5)

## அரசின் பட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விடுதலைக் கூட்டணி, ரெலோ, ஜே.வி.பி.,'சிஹல உறுமய' ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்செல்வராசா நேற்றுக் காலை திடீரென இந்தியாவுக்குப் பயணமானதால் அவர் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை.

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதிகளான படையினரையும் விடுதலைப் புலிகள் விடுவித்துவருவதற்குப் பதில் நடவடிக்கையாகவே அரசு கைதிகள் பத்துப் பேரை விடுவித்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் அரசாங்கம் அதனை வெளிப்படையாக அறிவிக்கவில்லை. (ஜ-3-10)

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தப்பட்டு சமாதானச் சூழ்நிலை ஏற்படவேண்டுமானால் அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கான சூழ்நிலை தற்சமயம் ஏற்பட்டுள்ளது. அரசு அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்துடன் பேச்சுக்கான திகதியையும் உடன் அறிவிக்க வேண்டும் - என்று அவர் தெரிவித்தார்.

## ஜேர்மனிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லோக தனியார் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். காயமடைந்த இந்தியப் பிரஜை ஒருவருக்கு கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டது. விமானத்தில் தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது. விமானத்தில் தீப் பற்றியதற்காகன காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை. (ஜ-3)


மாபெரும் மலிவு விற்பனை

சேட்டிங்ஸ், சூட்டிங்ஸ், ரைற்ஸ்கேட்
பிளவ்ஸ், ரைற் T சேட், சாறி வகைகள்
மற்றும்
புடைவைத் தினுசுகளை
மலிவாகப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்



சிவம் ரெக்ஸ்ரைல்ஸ்
K.K.S.வீதி.(இணுவில்) கோண்டாவில் மேற்கு. கோண்டாவில்.
(C/16286)

நாளை !

பூங்கா திறப்பு விழாவும், பூங்கன்றுகள்
கண்காட்சியும் விற்பனையும்

GREEN PARK

152/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(ICRC, கைலாசபிள்ளையார்கோயில் சந்திகளுக்கிடையில்)
நாளை (13-04-2001) வெள்ளி
மாலை 4 மணி முதல் 15 ஆம் திகதி ஞாயிறு
இரவு 8 மணி வரை.

உங்களுக்கான எமது ஏற்பாடுகள்

சிறுவர்களுக்கான ஆச்சரியமூட்டும் விளையாட்டுக்கள்
மலையருவி
தண்ணீர்ச் சிந்திகள்
மின்குமிழ் பூப்பந்தல்கள்
மின்குமிழ் வளைவுகள்
மற்றும்பல (C/16082)

MARUTHI
மா
ரு
தி
ரெ
க்
ஸ்

வெளிநாட்டில்
இருந்து
இறக்குமதி
செய்யப்பட்ட
அனைத்து
றெடிமேட்
ஆடைகளையும்
மலிவு
விலையில்
பெற்றுக்
கொள்ளலாம்.

No.1, Bazzer Street,
Jaffna. (C/16277)

தேவை

ஒகன் இசைப்பயிற்சி முறையாக வழங்கக் கூடிய சிறந்த தேர்ச்சியுள்ள ஒருவர் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
உடன் நேரில் வரவும்.

தூரிகை
M.M.V. றோட்,
நெல்லியடி
(C/16264)

ACCOUNTING
MR. BALAVASAN
B.B.A. (F.M.Spl)
A/L 2001
COMPANY
Beg: 15/04/01 8.00 a.m
VICKNA
INSTITUTE OF EDUCATION
(86523)

தீவக மாணவர்களிற்கு
மணியின் புத்தாண்டுப் பரிசு
A/L 2003
(கலை, வர்த்தகம்)
பொருளியல்
ஆசிரியர்: த.தனேந்திரன்
(B.COM.(HONS)(M.M.SPL)
(H.N.Dip. in.ACC)
ஆரம்பம்: 15/04/2001
ஞாயிறு 8 மணி
மணி கல்வி நிறுவனம்
வேலணை, ஊர்காவற்றுறை
(86576)

நாளுக்கு நாள் அறிமுகமாகி வரும் புடைவை நாகரிகத்தினை உடனுக்குடன் யாழ்நகரில் அறிமுகமாக்கிட...
பெண்களுக்கான/ஆண்களுக்கான
தனித்தனி காட்சி அறைகளில்
* வெளிநாட்டு ஆடைகள், சல்வார் கமிஸ்.
* சேட்டிங்ஸ், சூட்டிங்ஸ், ரைற்ஸ்கேட்,பிளவ்ஸ்,
ரைற் T சேட்
வகைகளைத் தரமான, மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.



புத்தாண்டுப் புதுமைப் பரிசு!
5000 ரூபாவுக்கு மேல் எம்மிடம் ஆடைகள்
வாங்குபவர்களுக்கு காத்திருக்கிறது............பரிசு!
நறுமணம் தரும் புதிய சென்ற்!!

றெஸ் பொயின்ற் அன் சுஜானாஸ்
இல.23,24A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(C/16180)

We Are Moving
For your convenience
To provide better services
With more facilities
To an accesiable place

HariKanan Printers
General & Commercial Offset Printers,
Computer Designers
No:424A.K.K.S Road,
Jaffna.

Note:- IBMS,No:701, K.K.S Road, Jaffna எனும் முகவரியில் இயங்கிய HARIGANESH OFFSET PRINTERS எனும் பதிப்பகம், HariKanan Printers எனும் பெயர் மாற்றத்துடன் No:424A,K.K.S Road,Jaffna எனும் முகவரியில் இயங்கிவருகின்றது என்பதனை வாடிக்கையாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

No-424A, K.K.S Road,
Jaffna.

Proprietor,
HariKanan Printers.

SALE! SALE!!
இதோ! முந்துங்கள்
உள்ளம் துள்ளும் புதுவருடப் பரிசு!
நாங்கள் ரெடி!
நீங்கள் ரெடியா?
ஆம்
மகாநதி வழங்கும்
மாபெரும் சிறப்புத் தள்ளுபடி
இத்தள்ளுபடி 13.04.01 வரை மட்டுமே!!
நதிகளின் சங்கமம் கடலில்!
சகலவித புடைவைகளின் சங்கமம் மகாநதியில்
புதிது புதிதாய்ப் பூத்திருக்கும்
புதுவருடப் புடைவைகளுக்கு
மகாநதி புடைவை அகம்
(முகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்குக் கைராசியான நிறுவனம்)
16, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
சாறி பிளவுஸ் பீஸ் துணி வகைகளுக்குப் பிரத்தியேகக் காட்சி அறை
16 நவீன சந்தை (மேல் மாடி), யாழ்ப்பாணம்.
(C/15995)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.04.2001 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.